பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 226 ஆனி 28 ஆம் நாள் சனிக்கிழமை 13 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## யாழ். குடாநாட்டில் போருக்குப் பின்னரான

# முதல் சிங்களக் குடியேற்றத்தின் பிரமாண்ட விகாரை இன்று திறப்பு

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அரசின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் நாவற்குழியில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சிங்களக் குடியேற்றத்தில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய விகாரையான சம்புத்தி சுமன, இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். 21



## தெரிவுக்குழுவில் முன்னிலையாவேன்

### ரணில் அதிரடி

கொழும்பு, ஜூலை 13

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பேன் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழு விசாரணைகள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்று வருகின்றன. அரச 04

## கெட்டவர்களில் யாரைத் தெரிந்தெடுப்பது? தமிழர்கள் முன்னுள்ள தெரிவு இதுதான்!!

### சபையில் சரா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13

அரசியலில் தமிழர்களின் நிலை இன்று பரிதாபகரமானது. அவர்களுக்கு முன்னால் உள்ள தெரிவு யார் நல்லவர்? யார் கெட்டவர்? என்பதல்ல. இருக்கின்ற கெட்டவர்களில் யாரைத் தெரிந்தெடுப்பது என்பது தான். இன்றைய ஆட்சிக்கு ஆதரவுவழங்கவேண்டுமா என்பதல்ல எம்முன் உள்ள கேள்வி, தமிழர்களுக்கு இதைவிட நரகத்தைத் தந்துவிடக் 21

## தீக்காயங்களுடன் இளம் தம்பதியினர் மருத்துவமனையில்

வவுனியா, ஜூலை 13

வவுனியா பொதுமண்டப முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீட்டிலிருந்து தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் இளம் தம்பதியினர் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

'இளம் தம்பதியரின் வீட்டில் கதறல் சத்தம் கேட்டது. அதனையடுத்து வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற 04



## இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து 26 ஏக்கர் காணி மீளளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 13

29 ஆண்டுகளாக இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலிருந்த 27 ஏக்கர் காணிகள் மக்கள் பாவனைக்காக நேற்றுக் கையளிக்கப்பட்டுள் 04

## யாழ்ப்பாணம் மின்சார சபைக்கென தென்னிலங்கையிலிருந்து 8 பேர்

### மீண்டும் இரகசியமாக நியமிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகத்தில் பணியாற்ற தென்னிலங்கையைச் சேர்ந்த 8 இளைஞர்களுக்கு இரகசியமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரசியல் சதிப்புரட்சியின் ஊடாக மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் 52 நாள் 21

## நாடாளுமன்றில் ரணில் - மகிந்த இரகசியமாக என்ன பேசினார்கள்?

### ஜே.வி.பி. கேள்விக்கணை

கொழும்பு, ஜூலை 13

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரண்டாம் மாடியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்ன? இரு தலைவர்களும் நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார 04

## திருக்கேதீச்சர ஆலய வளைவு விவகாரம்


# மன்னார் ஆயர் இல்லாமல் கூட்டம் வேண்டாம் செல்வம், சார்ள்ஸ் எம்.பிக்கள் கோரிக்கை

### கூட்டத்தை நிறுத்தியதாக அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

திருக்கேதீச்சரம் ஆலய வீதி வளைவு அமைப்பது தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு காண்பதற்காக மன்னார் மாவட்ட செயலகத்தில், அனைத்து தரப்பினரும் கலந்துக்கொள் 04

# மொட்டை அடிப்பதன் பின்னாலுள்ள ரகசியம் என்ன தெரியுமா....!



தலையை மொட்டையடித்து கொள்வது என்பது பல இந்துக்கள் பின்பற்றி வரும் ஒரு முக்கியமான சடங்காகும். தலைமுடி என்பது பெருமையான ஒரு விஷயமாகும். அதனை கடவுளுக்கு காணிக்கையாக அளிப்பதன் மூலம், நம் செருக்கும், ஆணவமும் நம்மை விட்டு நீங்கும் என நம்பப்படுகிறது.

பிறப்பு மற்றும் மறுபிறவி மீது இந்துக்களுக்கு நம்பிக்கை உண்டு. கடந்த ஜென்மத்தில் இருந்த பந்தங்களின் தொடர்பை துண்டிப்பதற்காகவே குழந்தைகளுக்கு முதல் மொட்டை போடப்படுகிறது. அப்படி தலையை மொட்டை அடிப்பதால் அக்குழந்தை இந்த பிறப்பில் புதிய வாழ்க்கையை தொடங்குகிறது. அதனால் இது ஒரு முக்கியமான சடங்காக பார்க்கப்படுகிறது.

தலைமுடி என்பது பெருமை மற்றும் ஆணவத்தை குறிக்கும் ஒன்றாக பார்க்கப்படுகிறது. அதனால் தலைமுடியை மொட்டை அடித்து கொள்வதன் மூலம், நாம் கடவுளிடம் சரணாகதி அடைகிறோம். தலைமுடியை மொட்டை அடிப்பதன் மூலம் நம் தலைக்கனத்தை இழந்து, கடவுளுக்கு அருகில் வருகிறோம். இது பணிவை எடுத்துக்காட்டும் ஒரு செயலாகும். மேலும் எந்த ஒரு ஆணவமும், எதிர்மறையான எண்ணங்களும் இல்லாமல் கடவுளை உணர ஒரு சின்ன முயற்சியாகும்.

அதனால் இந்து மதத்தில் மொட்டை அடிப்பது என்பது மிகவும் முக்கியமான சடங்காகும். இது பணிவை எடுத்துக்காட்டும் செயல். உங்களை ஒட்டு மொத்தமாக கடவுளுக்கு அற்பணிக்கும் ஒரு முயற்சி.

# ஜூலை மாத ராசிபலன்கள் - 2019



குரு பகவானை ராசி நாதனாகக் கொண்ட தனுசு ராசி நேயர்களே. இந்த மாதம் சுபமான மாதம். மகிழ்ச்சியான தருணங்கள் அதிகம் நடைபெறும் காரணம் கிரகங்களின் சஞ்சாரம் அப்படி இருக்கிறது. ஏழாவது வீட்டில் மூன்று கிரகங்கள் இருப்பதால் ஆதாயம் எதுவுமில்லை. நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை ஊட்டக்கூடியவராக குரு இருப்பார்.

எட்டாவது வீட்டில் இருக்கும் கிரகங்களின் மீது உங்கள் ராசிநாதன் பார்வை விழுவது சிறப்பம்சம். தனுசு அதிகம் மன உளைச்சலுக்கு ஆளாகி வந்த உங்களுக்கு இனி நல்லது நடப்பதற்கான சூழ்நிலைகள் வரத் தொடங்கியிருக்கும். உங்கள் ராசியில சனி கேது சஞ்சரிக்கின்றனர்.




உங்களுக்கு இது ரொம்ப நல்ல மாதம். சனிபகவான் மூலம் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். கிரகங்களின் சஞ்சாரத்தினால் பிரச்சினைகள் முடிவுக்கு வரக்கூடிய காலம் வந்து விட்டது. பிரச்சினைகள் முடிவுக்கு வரக்கூடிய நேரம் நெருங்கி விட்டது. சனிபகவான் மூன்றாம் பார்வையாக தைரிய ஸ்தானத்தை பார்க்கிறார். ஏழாம் வீட்டில் சுக்கிரன் இருக்கிறார்.

அந்த சுக்கிரனை சனி பார்வையிடுவதால் மனைவி மேலே அக்கறை தேவை. ராசியில் உள்ள சனி கேது சஞ்சாரம் வம்பு வழக்குகளை கொண்டு வரலாம். பிரிந்த உறவுகள் மீண்டும் இணையக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். நெருக்கடிகள் முடியக்கூடிய மாதமாக இந்த மாத அமையும். உங்கள் கணவர்,மனைவியின் உடல் நலத்தில் அக்கறை தேவை. நீங்கள் கவனமாக இல்லாவிட்டால் சிலர் உங்களை ஏமாற்றி விடுவார்கள். உங்கள் நண்பர்களால் ஏமாற்றப்படுவீர்கள் என்பதால் நட்பு விசயத்திலும் எச்சரிக்கை தேவை. ஆஞ்சனேயரை வழிபட்டால் பிரம்மாண்ட வளர்ச்சி கிடைக்கும்.

# உங்கள் பிறந்த திகதி என்ன? நிரந்தர அதிர்ஷ்டங்கள் இதுதான்!



ஒருவரின் பிறந்த திகதியை வைத்து அவர்களுக்கு அதிர்ஷ்டத்தை கொடுக்கும் எண்கள், நிறம், ரத்தினக்கல், திசை, கிழமை மற்றும் வணங்க வேண்டிய கடவுள் ஆகிய அனைத்தை பற்றியும் ஜோதிடம் கூறுகிறது.

1,10,19,28 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி சூரியன்
அதிர்ஷ்ட எண்கள் - 1, 4
அதிர்ஷ்ட நிறம் - வெளிர் சிவப்பு, சந்தனக்கலர், ஆரஞ்சு, நீலம் கலந்த வெள்ளை
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - கனகபுஷ்பராகம், மாணிக்கம், ப்ளட் ஸ்டோன்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - சிவன்

2,11,20,29 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி சந்திரன்.
அதிர்ஷ்ட எண்கள் - 2ன் வரிசை(அதாவது 2,20,29), 7ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - வெண்மை, சந்தனக்கலர்
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - முத்து, சந்திரகாந்த கல், உபலகம்
அதிர்ஷ்ட திசை - வட மேற்கு
அதிர்ஷ்ட கிழமை - திங்கள்
வணங்க வேண்டிய கடவுள் - பார்வதி

3,12,21,30 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி வியாழன்
அதிர்ஷ்ட எண்கள் - 3ன் வரிசை, 9ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - தங்கநிறம், பிங்க்
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - கனகபுஷ்பராகம், அமிதிஸ்ட், டோபாஸ்
அதிர்ஷ்ட திசை - வட கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - வியாழன்
வணங்க வேண்டிய கடவுள் - தட்சிணாமூர்த்தி

4,13,22,31 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி ராகு

அதிர்ஷ்ட எண்கள் - 1,10,19,27,28,31,40
அதிர்ஷ்ட நிறம் - மெருன், லைட்ஃப்ளூ
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - கோமேதகம், கார்னட், ஸ்பின்னல்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - துர்க்கை, பத்ரகாளி



5,14,23 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி புதன்
அதிர்ஷ்ட எண்கள் - 5,9
அதிர்ஷ்ட நிறம் - வெளிர் பச்சை, சாம்பல் நிறம்
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - மரகதம், அனக்ஸ், பச்சை நிற ஓபல்
அதிர்ஷ்ட திசை - வடக்கு
அதிர்ஷ்ட கிழமை - புதன்
வணங்க வேண்டிய கடவுள் - மகாவிஷ்ணு

6,15,24 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி சுக்கிரன்
அதிர்ஷ்ட எண்கள் - 6ன் வரிசை, 4ன் வரிசை, 9ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - பிங்க், மஞ்சள்
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - வைரம், ஜிர்கான், பெரிடாட்
அதிர்ஷ்ட திசை - தென் கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - வெள்ளி
வணங்க வேண்டிய கடவுள் - மகாலெட்சுமி



7,16,25 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி கேது
அதிர்ஷ்ட எண்கள் - 2ன் வரிசை, 7ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - பலநிறம், பாசிபச்சை
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - வைடூரியம், டைகர்ஐ, கருப்பு நிற ஓபல்
அதிர்ஷ்ட திசை - வட மேற்கு
அதிர்ஷ்ட கிழமை - செவ்வாய்
வணங்க வேண்டிய கடவுள் - விநாயகர்

8,17,26 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி சனி
அதிர்ஷ்ட எண்கள் - 5ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - நீலம், ஊதா
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - நீலம், லாபீஸ் லசூலி டர்க்வாய்ஸ்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - சனி, ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - காவல் தெய்வம்

9,18,27 திகதியில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்
இந்த எண்களின் அதிபதி செவ்வாய்
அதிர்ஷ்ட எண்கள் - 3ன் வரிசை, 6ன் வரிசை, 9ன் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - சிவப்பு, வெளிர் நீலம்
அதிர்ஷ்ட ரத்தினக்கல் - பவளம், ப்ளட் ஸ்டோன், கர்னலியன்
அதிர்ஷ்ட திசை - தெற்கு
அதிர்ஷ்ட கிழமை - செவ்வாய், வியாழன்
வணங்க வேண்டிய கடவுள் - முருகன்

# MASSIVE VEHICLES AUCTION SALE



**18th of July**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

## VAVUNIYA

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 15th, 16th & 17th July**

(Please refer the Udayan On 15th of July 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

**SCHOKMAN & SAMERAWICKREME**
One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.

Head Office & Showroom: 24, Torrington Road, Kandy. Tel: 081 2227593, Fax: 081 2224371, Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom: No.6A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502680, 2585408, Tel / Fax: 011 2588176, Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

---

## மாணவர்களுக்கான இலவச வீசா சேவை

நேர்முகத் தேர்வு மற்றும் பதிவுகளுக்கு
இம்மாதம் 14ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
**Jetwing Jaffna**வில்
(முன் பதிவுகள் மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே ஆலோசனை வழங்கப்படும்)
2019 செப்டெம்பர் மாதம் வெளிநாட்டில் தடம் பதித்து உங்கள் வாழ்க்கையை ஆரம்பியுங்கள்
லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, போலந்து, ஜேர்மன், லெட்வியா, ரொமேனியா, நியூசிலாந்து
முன்பதிவுகளுக்கு:
அழையுங்கள்: 077361 5261, 077 175 0505
**Winspire International Education**

---

## விநாயகர் திருமண சேவை

எம்மிடம் மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உள்ளன.
இல.22, முருகன் கோயிலடி, தாவடி, கொக்குவில்.
Mobile Viber 077 255 0807
(CS 26590)(04.17)

---

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 667
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,344,370/-
வெற்றி இலக்கங்கள்: 26 32 59 67 O (ஆங்கில எழுத்து)
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 825 825

---

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 12.07.2019 | 2559 | நீலம் |

தனுசு
வெற்றி இலக்கங்கள்: 22 33 41 51
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,543,370/=
14.07.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

---

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 787
சீட்டிழுப்பு திகதி: 12.07.2019
வெற்றி இலக்கங்கள்: 11 32 38 56 O (ஆங்கில எழுத்து)
அடுத்த செவ்வாய் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 28, 576,096/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 16.07.2019 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

---

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1003
சீட்டிழுப்பு திகதி 2019.07.11 வியாழக்கிழமை
Y 25 39 45 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,062,408/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

---

## பணியாளர்கள் தேவை (VACANCY)

1. Civil Engineer - (Minimum 1 year experience)
2. தொழில்நுட்ப அலுவலர் - T.O
   - NVQ Level 4 or Equivalent with minimum 2 year experience

**Contact No:075 918 3940**
(திங்கள் - சனி வரை 8.30AM - 5.00PM மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
E-mail:starcontractors12@hotmail.com


---

# 4ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில் 30 . 08 . 1985
அம்பிகை அடியில் 13 . 07 . 2015



**அமரர் தயாநிதி கஜேந்திரன் (ராஜா)**

திதி வெண்பா

ஆண்டு மன்மத ஆனிமாத திங்கள் அன்று
காண்தகு அமரபக்கத்திரயோதசி திதி
தன்னில் கஜேந்திரன் சென்றனன்
விண்ணுலகம் எமை மீளாத்துயரில் ஆழ்த்தி
ஆண்டுகள் நான்கு கடந்தாலும் அவனியில்
உன்னை மறப்பதுண்டோ ராஜா என அழைத்த
எங்கள் தெய்வமே ஆறாது என்றும் உன் நினைவுகள்

"இந்திரபிரசம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

---


விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111
உதயன்


---



## புத்துவெட்டுவான்
## அருள்மிகு பத்திரகாளி அம்மன்
## ஆலய வருடாந்த உற்சவம்
## 15.07.2019 (திங்கள்)

மெய்யடியார்களே
அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் - 15.07.2019 பகல் இரவு வழமைபோல் நடைபெறும் என்பதனை பக்த அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு:
ஆலய வளாகத்தினுள் வியாபார நிலையம் அமைப்போர் 14.07.2019 காலை 8.00 மணிக்கு ஆலய பரிபாலன சபையினரிடம் தொடர்புகொள்ளவும்.

ஆலய பரிபாலன சபையினர்,
அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலயம்
புத்துவெட்டுவான், மாங்குளம்.

---

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னையா சண்முகம்

தோற்றம் 05.04.1935
மறைவு 13.07.2004

திதி: 13.07.2019

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மகன் - தயாபரன் (ஜேர்மனி)

## இராணுவ...

ளன.

தையிட்டி தெற்குப் பகுதியில் 26.4 ஏக்கர் காணிகளும் மற்றும் பலாலி வடக்கில் ஒரு ஏக்கர் பாடசாலைக் காணியுமே விடுவிக்கப்பட்டுள்ளது.

காணிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று 10.30 மணியளவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண இராணுவக் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியால் காணிகள் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் கையளிக்கப்பட்டது. ஆளுநர் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரிடம் காணிகளைக் கையளித்தார். (ஓ,5,21,26)

## நாடாளுமன்றில்...

திஸாநாயக்க.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நேற்று (நேற்றுமுன் தினம) நண்பகல் 12.10 முதல் 12.30 மணி வரையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரண்டாம் மாடியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்ன? இரு தலைவர்களும் நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

1949 இல் இருந்து இற்றைவரை அரசுகளுக்கு எதிராக 26 நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு தீர்மானம் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அதுவும் கடந்த ஒக்ரோபர் மாதம் ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சியின்போது மகிந்த அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானமாகும் - என்றார். (ஓ,5,22)

## தீக்காயங்களுடன்...

போது வீடு முழுவதும் மண்ணெண்ணை சிந்திக் காணப்பட்டது. கணவனும், மனைவியும் தீப்பற்றிய நிலையில் காணப்பட்டனர். அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தோம்' என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

ஜனகன் (வயது-29) சுமங்கலி (வயது-27) ஆகிய இருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஓ,5)

## தெரிவுக்குழுவில்...

தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை தெரிவுக் குழு விசாரணைக்கு அழைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தெரிவுக்குழு விசாரணைக்கு அழைத்தாலும் செல்ல மாட்டேன் என்று கூறிவருகின்றார். இந்த நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டரீதியானது என்று குறிப்பிட்டதுடன், விசாரணைக்குழு முன்னிலையில் தோன்றி சாட்சியமளிப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகள் நேற்று இடம்பெறவில்லை. புலனாய்வு அதிகாரிகளை தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் வெளிநாட்டில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்றுள்ளதால் கலந்து கொள்ள முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டு, அவர்களது விசாரணை எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## மன்னார்...

ளும் கலந்துரையாடல், அமைச்சர் மனோ கணேசனின் பணிப்புரையின் பேரில் மன்னார் மாவட்ட செயலரால் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மன்னார் ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ வெளிநாடு சென்றுள்ள காரணத்தால், நடைபெற இருந்த கலந்துரையாடலை பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மனோ, நடைபெற இருந்த கலந்துரையாடலை ஒத்தி வைத்துள்ளார். இது தொடர்பில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது,

மன்னார் ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ கலந்துக்கொள்ளாமல், இந்த பேச்சு ஒருபோதும் பலனளிக்க போவதில்லை. அவர் வரும் வரை பேச்சை ஒத்தி வைக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் நியாயம் இருப்பதாக நினைக்கின்றேன். இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணப்பாடு தமக்கும் இருப்பதாக அவர்கள் என்னிடம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழர்கள் மத அடிப்படையில், இந்து, கத்தோலிக்கர் என்ற அடிப்படையில் பிரிவதற்கு இடம் கொடாமல் நாம் செயற்பட வேண்டும் என்று அவர்களுக்கு நான் கூறினேன். ஆயர் நாடு திரும்பிய உடன், கலந்துரையாடலை கூடிய விரைவில் நடத்த புதிய திகதிகளை பெற்று தரும்படி அவர்களிடம் நான் கூறியுள்ளேன். கட்டாயமாக, ஆயரிடம் பேசி புதிய திகதிகளை பெற்று தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் இருவரும் என்னிடம் உறுதியளித்துள்ளனர் - என்றார். திருக்கேதீச்சர ஆலய வளைவு அமைப்பதற்கு மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியிருந்தது. இதனையடுத்து பிரதேச சபைத் தவிசாளரை ஆயர் இல்லத்துக்கு அழைத்த ஆயர், அனுமதியை இடைநிறுத்துமாறு கூறியிருந்தார். பிரதேச சபைத் தவிசாளர் வழங்கிய அனுமதியை இடைநிறுத்தினார். இதற்கு எதிராக வவுனியாவில் நேற்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஓ,5)



# பூக்கும் கற்கள்!

'லித்தாப்' எனும் கற்செடிகள் தாவர உலகின் அதிசயங்களில் ஒன்று. கற்களில் பூக்கள் பூத்தால் எப்படியிருக்கும்! அதுபோலவே தோற்றமளிக்கின்றன இந்தச் செடிகள். பனிக்கட்டிக் குடும்பம் எனப்படும் 'அய்சோயேசியே' தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தவை. சதைப்பற்றுள்ள இந்தச் செடிகள் சிறிய கற்களைப் போலவே பல வண்ணங்களில் தோற்றமளிக்கும்.

தாவரவியலாளர் 'வில்லியம் ஜான்' என்பவர் 1811இல் தென்னாப்பிரிக்காவின் பாலைநிலங்களில் இந்தச் செடியை முதன் முதலில் கண்டறிந்தார். அதன் பிறகு லித்தாப் செடியின் பல வகைச் சிற்றினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்னாப்பிரிக்கா, நமீபியா ஆகிய இடங்களில் பாறைகள் அதிகம் உள்ள வறண்ட நிலப்பகுதிகளில் இவை காணப்படுகின்றன.

மிக மெதுவாக வளரும் இயல்புடையவை. கருப்பு, வெள்ளை, சாம்பல், மஞ்சள், பழுப்பு நிறங்களில் கற்களைப் போன்ற தோற்றத்தில் இருக்கும். செடியில் தண்டுகள் இருக்காது. இரண்டு சிறிய சதைப்பற்றுள்ள இலைகள் காணப்படும். அடிப்பகுதி இணைந்து எதிரெதிராக இலைகள் இருக்கும். காற்றின் ஈரப்பதத்திலிருந்து நீரைச் சேமித்துக்கொள்ளும். ஆண்டுக்கு ஒருமுறை இலைகள் உதிர்ந்து புதிதாக இரண்டு இலைகள் உருவாகும். மெல்லிய நூல்போன்ற வேர்கள் மண்ணுக்கு அடியில் இருக்கும். சூரிய ஒளியை ஈர்த்து ஒளிச்சேர்க்கை செய்யும். இலைகளுக்கு இடையில் உள்ள வளர்நுனியில் மஞ்சள், வெள்ளை நிறத்தில் பூக்கள் பூக்கும். ஓரிடத்தில்வளரும் செடிகள் அனைத்தும் ஒரே சமயத்தில் பூக்கும். முளைத்து 4 வருடங்களில் பூக்கத் தொடங்கும். பூக்களை வைத்தே இவை செடி எனத் தெரிந்து கொள்ளலாம். செடியின் உலர்பழங்கள் ஈரம் பட்டால் வெடித்துச் சிதறும் தன்மை உடையவை. பழம் வெடிப்பதன் மூலம் சிதறும் சிறிய விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும்.

இரண்டாகப் பிளவுபட்ட கூழாங்கற்கள் போலத் தோற்றமளிப்பதால்'கூழாங்கல்செடி' என்றும் அழைக்கப்படுகிறது.

'டிஷ் கார்டனிங்' முறையில் ஆழம் குறைவான கிண்ணங்களில் கூழாங்கற்களுக்கு இடையில் வைத்து செடியை வளர்க்கலாம். இணையம் வழியாக இந்தச் செடி விற்பனை செய்யப்படுகிறது. இவை அழகுக்காக உலகம் முழுவதும் விரும்பி வளர்க்கப்படுகிறது.

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய ஆடி திருக்குளிர்த்தி மஹா சங்காபிஷேகம் தொடர்பான அறிவித்தல்

**காரைநகர் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கிலக்கம் 7642323** இற்கு அடியவர்கள் எவரும் **ஆடித் திருக்குளிர்த்தி மஹா சங்காபிஷேக உற்சவத்துக்குப் பணவைப்புச் செய்ய வேண்டாம்** என்று கேட்டுக் கொள்கின்றோம்.

**பெறுநர் குழு,**
**மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயம்,**
**காரைநகர்.**
(IN 10681)(11,17)

கண்ணீர் அஞ்சலி



எமது கழக தலைவர் **ப.பகீரதன்**
அவர்களின் மாமனாரும்
**ப.மீனலோஜினி** அவர்களின்
தந்தையுமான நவாலி
வடக்கைச் சேர்ந்த
**தில்லையம்பலம் கந்தையா ஆறுமுகம்**
அவர்கள் காலமான செய்திஅறிந்து
துயர் அடைவதுடன்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் வளர்மதி நிறைவாழ்வகமும்.
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு



# புலியும் சிங்கமும்

அது ஒரு கோடை காலம். அந்தக் காட்டில் வாழ்ந்த விலங்குகள் அனைத்தும் அந்தக் காட்டை விட்டு வேறு காட்டுக்குச் சென்று விட்டன. இதனால் காட்டில் உள்ள மற்ற விலங்குகளுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அந்த காட்டில் வாழ்ந்த சிங்கமும் புலியும் ஓர் ஒப்பந்தம் செய்தன. சிங்கம் புலியிடம் "நாம் இருவரும் ஒன்றாக வேட்டையாடி கிடைக்கும் இரையைச் சமமாகப் பிரித்துக் கொள்வோமா?"என்றது புலியும் அதற்கு சம்மதம் தெரிவித்தது.

ஒருநாள் சிங்கமும் புலியும் வேட்டைக்குச் செல்லும் போது வழி தவறிய கால் உடைந்த மான் குட்டி ஒன்று வழியில் அமர்ந்திருப்பதைப் பார்த்தன. சிங்கத்துக்கும் புலிக்கும் அளவற்ற மகிழ்ச்சி. ஏனெனில் சிங்கமும் புலியும் உணவு சாப்பிட்டு மூன்று நாள்கள் ஆகி விட்டன. சிங்கமோ அந்த மானின் வயிற்றுப் பகுதி எனக்குத்தான் என்றது. புலியோ "இல்லை, இல்லை அதன் வயிற்றுப் பகுதி எனக்குத்தான்" என்றது.

மானைப் பங்கு போடுவதில் சிங்கமும் புலியும் பயங்கரமாகச் சண்டை செய்தன. இரண்டும் வெகு நேரம் சண்டை செய்ததால் மிகவும் களைப்படைந்து விட்டன. அதனால் இரண்டும் தரையில் சாய்ந்தன. அந்த சமயம் வெகு தூரத்திலிருந்தே இவர்களின் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு குள்ள நரி ஓடி வந்து அங்கிருந்த மானைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டது. சிங்கமும் புலியும் ஒன்றும் செய்ய முடியாமல் அதனைப் பார்த்த படி கீழே தரையில் கிடந்தன. இவை இரண்டும் தாம் வேட்டையாடுவதில் கிடைத்ததை ஒற்றுமையாக நல்ல முறையில் பங்கு போட்டுக் கொள்ளாமல் வீணாகச் சண்டை போட்டு தமது இரையை இழந்து விட்டோமே என்று வருத்தப்பட்டன.




## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் இரவீந்திரன்

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரவீந்திரன் 08.07.2019 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (S.K)- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் (கனடா) அன்புக் கணவரும், கார்த்திகா (கனடா), கீர்த்திகா (லண்டன்), தர்ஷிகா (கனடா), சுவிதா (கனடா), கிஷாந் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (கனடா), ராதாகிருஷ்ணன் (லண்டன்), குகமூர்த்தி (கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் மாமனும், அரவிந், அஷ்விதா, ரகித்தா, அதுஷன், அதுஷனா, நகீரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தபீந்திரன் மற்றும் சுமந்திரன், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் திருச்சோதி, பிரகலாநிதி, பகீரதன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தியாகராயா மற்றும் Dr.பரமநாதன் (லண்டன்), கிருஷ்ணபிள்ளை (கனடா), சிவக்கொழுந்து, இராஜலட்சுமி, சிவமணி (பிரான்ஸ்), புஸ்பநாதன், மகேந்திரன், பிரபாகரன், லோசனா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கண்மணியின் மருமகனும் மற்றும் நடராசா, காலஞ்சென்றவர்களான சிவராசா, கைலாயபிள்ளை, சரஸ்வதி மற்றும் அருந்ததி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 .00 மணிக்கு அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈச்சங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**உசன், மிருசுவில்** **குடும்பத்தினர்.**


**077 613 4528 , 077 854 3801**



பிறப்பு
02.05.1956

இறப்பு
08.07.2019

# மரண அறிவித்தல்



பிறப்பு
25 . 12 . 1951

இறப்பு
10 . 07 . 2019

## சின்னத்துரை சண்முகராஜா

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகராஜா 10.07.2019 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னத்துரை ராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற தம்பிமுத்து, மாசிலாமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூபாலராஜா, செல்வராணி மற்றும் கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுகந்தி (ஆஸ்திரேலியா), சுதாகர் (கனடா), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகதாஸ் (ஆஸ்திரேலியா), நிதிலா (கனடா), கீதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பூமிஜா (ஆஸ்திரேலியா), பிரணவி (ஆஸ்திரேலியா), றெய்ஜா (ஆஸ்திரேலியா), றேனுஜன் (கனடா), ஆருஜன் (கனடா), ஆர்னா (கனடா), கிறிஸ்னி (லண்டன்), தீபிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் கமலராணி (கனடா), காலஞ்சென்றவர்களான நடராஜா, பஞ்சலிங்கம் மற்றும் புனிதவதி (பிரான்ஸ்), சுப்பிரமணியம் (லண்டன்), இந்திராதேவி (கனடா), காலஞ்சென்ற கணேசகுமார், பாலகுமார் (லண்டன்), ஜெயகுமார் (சுவிஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), தங்கா (கனடா), சாந்தி (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்), வனஜா (பிரான்ஸ்), கிரிஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் முற்பகல் 10.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.44/14, இராமகிருஷ்ணா பாடசாலை லேன்,**
**கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

அன்னலட்சுமி (மனைவி) - Mobile : + 94 783257748 / Phone : + 94 212219024
சுகந்தி (மகள்) - Mobile : + 61 447344333
சுதாகர் (மகன்) - Mobile : + 141 65083938
செந்தூரன் (மகன்) - Mobile : + 44 7950763648

# கண்ணீர் அஞ்சலி



கியூடெக் கரித்தாஸ் யாழ்ப்பாணம் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனரும், நெபாட் வலைத்தொழிற்சாலை இயக்குனர் சபையின் முன்னாள் இயக்குனரும் ஆகிய

## அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன்

அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துவதோடு யாழ். மறைமாவட்டத்திற்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இயக்குனர்
கியூடெக் கரித்தாஸ் பணியாளர்கள்
நெபாட் வலைத்தொழிற்சாலை பணியாளர்கள், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1954

மறைவு 12 . 07 . 2019

## அந்தோனிப்பிள்ளை பெர்னாண்டோ (தங்கராசா)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பெர்னாண்டோ 12.07.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் லூர்த்துமரியையின் அன்புக் கணவரும் பெலஸ்ரின் (டென்மார்க்), அன்ரனிஸ்ரா (ஆசிரியர் - யா/கொழும்புத்துறை இ.ம.வி), அனுஸ்ரி (ஆசிரியர் - யா/சென்றோக் றோ.க.வி), அமலஸ்(முகாமையாளர், ஓரியன்ற் பினான்ஸ் யாழ்ப்பாணக்கிளை) ஆகியோரின் தந்தையும் யூட் ஜெனிஸ்ரன்(டென்மார்க்), நியூட்டன் (ஆசிரியர் - யா/பூம்புகார் அ.த.க பாடசாலை), வின்சன்ராஜ் (ஆசிரியர் - யா/புங்குடுதீவு ராஜராஜேஸ்வரி வித்தியாலயம்), ஜெயதீபா (முகாமைத்துவ உதவியாளர், பயிலுநர் - யா/ பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (13.07.2019) சனிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 533 0503

# விற்பனை

12mm, 10mm முறுக்குக்கம்பி 20 அடி (Original No 1 Ashok, CN, R500, SLS 375) குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

**DANUS இரும்பகம்**
494c, K.K.S Road, Inuvil
077 484 8977

# பதவி வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் இலங்கையின் முதல்தர **காப்புறுதி கம்பனி** தனது வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுபவமுள்ள, அனுபவமற்ற விண்ணப்பங்களை கோரியுள்ளது.

* பிராந்திய முகாமையாளர்
* விற்பனை முகாமையாளர்
* குழு முகாமையாளர்
* விற்பனை பிரதிநிதிகள்

ஆகிய பதவிகளுக்காக உங்களது சுய விவரக்கோவையை எதிர்வரும் **19.07.2019** ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விளம்பர இல. : JF/1013,
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி பேரம்பலம்



பிறப்பு 08.03.1954 இறப்பு 07.07.2019

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.528, பொன்னகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பேரம்பலம் 07.07.2019 காலமானார்.

அன்னார் பேரம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், விஜயதர்சினி, நர்மதா (ஆஸ்திரேலியா), கஜந்தன், லாவண்யா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோவிந்தராசா, முரளிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சயன், சாரலன், காருண்யா, விசால் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.528,
பொன்னகர்


தகவல்:
குடும்பத்தினர்.

077 359 3766

# தண்ணீர்

நாள் ஒன்றுக்கு ஒரு சுகதேகியான ஒருவருக்கு ஆறிலிருந்து எட்டுக் குவளை தண்ணீர் தேவைப்படுகிறது.

இதை மிக எளிதான முறையில் கண்டுபிடித்து விடலாம். நாம் உட்கொள்ள வேண்டிய தண்ணீரின் அளவானது எமது உடம்பிலிருந்து வெளியேறும் சிறு நீரின் நிறத்தைப் பொறுத்ததாகும். தண்ணீர் குடிப்பது குறையக் குறைய சிறுநீர் குறைவாகவும் கருஞ்சிவப்பாகவும் வெளியேறி உடலில் வெப்பத்தையும் சிறுநீர் கடுப்பையும் ஏற்படுத்தும்.



# தேவை

மிக்சர் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் 15000/=
மதிய உணவு வழங்கப்படும்.

தொடர்பு:- 075 978 9223
021 205 2200

# பணியாளர்கள் தேவை

**வரவேற்பாளர்** பெண்

**வடிவமைப்பாளர்** ஆண்/பெண்

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SMART DIGITAL PRINTING
#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com
MUG, BANNER, OFFSET, SCREEN PRINTING

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தங்கச்சி பாலச்சந்திரன்



பிறப்பு 27.01.1949 இறப்பு 12.07.2019

பலாலி கிழக்கைப்பிறப்பிடமாகவும் ஆவரங்கால்சங்கணாவத்தைவீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி பாலச்சந்திரன் நேற்று (12.07.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும் பாலச்சந்திரனின் பாசமிகு மனைவியும் இளையதம்பி, தங்கம் காலஞ்சென்ற செல்வம், இராஜேஸ்வரி மற்றும் நல்லபிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும் செல்லச்சந்திரன் (லண்டன்), யோகச்சந்திரன் (லண்டன்), ஞானச்சந்திரன் (லண்டன்), வசியச்சந்திரன்(லண்டன்), நிமலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி வடக்கு சித்தவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

சங்கணாவத்தை வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

பாலச்சந்திரன்: 077 423 5307
செல்வச்சந்திரன் : +44796182451

# வேலையாள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அருகில் இருக்கும் ஹோட்டல் ஒன்றுக்கு

- Rotti Maker
- சமையலாளர்
- உதவியாளர்
- பரிமாறுபவர்கள்

ஆண், பெண் இருபாலரும் தேவை.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.

077 766 0776

# ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தரம்: 05 முதல் தரம் 12 வரையும்
பேச்சு ஆங்கிலம் - சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கு அனைத்து தரப்பினருக்கும் வீடு வந்து கற்றுத்தரப்படும்.

077 334 2392

# யா/ அருணோதயக் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

காலம்:- 13.07.2019 (சனிக்கிழமை)
நேரம்:- மாலை 5 மணி
இடம்:- கதிர்காமசேகரம் திறந்தவெளி அரங்கு

தலைவர்
திரு. நர்.கேதீஸ்வரன் (கல்லூரி முதல்வர்)

பிரதம அதிதி
கௌரவ அமைச்சர் **மனோ கணேசன்** (சமூக ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர்)

சிறப்பு அதிதி
திரு. **சி.மதியழகன்** (பிரதிக் கல்வி பணிப்பாளர் - கல்வி முகாமைத்துவம் வலிகாமம் கல்வி வலயம்)

நினைவுப் பேருரை
வை.விஜயபாஸ்கர் (அருணோதயன்)
(விரிவுரையாளர் கல்வியியற் துறை யாழ் பல்கலைக்கழகம்)

ஆசியுரை
கலாநிதி. ஆறு.திருமுருகன் (தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

*கல்லூரிச் சமூகம், யா/ அருணோதயக் கல்லூரி*

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வடக்கில் வியாபிக்கும் பௌத்த மயமாக்கல்

தெற்கில் தமிழர் பிரதிநிதிகளின் ஆதரவுடன் அரசு ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ள அதேசமயத்தில் வடக்கின் முதல் சிங்களக் குடியேற்றத்தின் விகாரைத் திறப்பு விழாபிரமாண்டமாகஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாவற்குழியில் புதிதாக பௌத்த விகாரை ஒன்று தோற்றம் பெறுகின்றது. அதன்திறப்பு விழாவில் நூற்றுக்கணக்கான பிக்குகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அங்கு 45 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் அங்கிருந்த 48 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்களை மைத்திரி – ரணில் தலையிலான கூட்டு அரசு வழங்கியது. தொடர்ச்சியாக அங்கு விகாரைஒன்றைக்கட்டும்செயற்பாடுகள்முன்னெடுக்கப்பட்டன. இந்த விகாரை கட்டுமானத்துக்கு சாவகச்சேரிப் பிரதேச சபை சாவகச்சேரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தது. சாவகச்சேரிப் பிரதேச செயலரும் மனுத் தாக்கல் செய்தார். உரிய ஆவணங்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியே மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின்னர் நீதிமன்றம் கட்டுமானத்துக்குத் தடை விதித்தது.

விகாரை கட்டப்பட்ட காணி வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமாக இருந்தது. இந்தத் தடையை அடுத்து வீடமைப்பு அதிகார சபை அந்தக் காணியில் விகாரை கட்டுவதற்கு அனுமதிக் கடிதம் கொடுத்தது. அது நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டு இடைக்காலத் தடையும் நீக்கப்பட்டது. அதன்பின்னர் பிரதேச சபையின் மனுவும் மீளப் பெறப்பட்டு, விகாரைகட்ட அனுமதியும்வழங்கப்பட்டது. உரிய ஆவணங்கள்சமர்ப்பிக்கப்பட்டதன்அடிப்படையில்அந்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்தச் சிங்களக் குடியேற்றமே வடக்கின் முதலாவது சிங்களக் குடியேற்றம் என்று கருத முடியும். இந்தச் சிங்களக் குடியேற்றத்தை நிறுவுவதற்கு அரச இயந்திரம் அதி உச்ச ஆதரவை வழங்கியுள்ளமை கண்கூடு. குடியேற்றம் அமைக்கப்பட்டமை முதல் விகாரை திறக்கப்படுவது வரையான நிகழ்வுகள் அதைப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் நடக்கும் பௌத்த மயமாக்கலை, காணி அபகரிப்பை நீதிமன்றத்தை நாடிக்கூடத் தடுக்க முடியாத கையறு நிலையிலேயே உள்ளனர். தெற்கில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் ஆதரவுடன் அரசு ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டிருந்தாலும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இவ்வாறான குடியேற்றங்களையோ, பௌத்த மயமாக்கலையோ, காணி அபகரிப்புக்களையோ தடுக்கத் திராணியற்ற நிலையிலே உள்ளனர் என்று கருத முடிகின்றது.

எதிர்காலத் திட்டங்கள் ஏதும் அற்ற நிலையில், தற்போதுள்ளநிலமையைக்கொண்டிழுக்கும்நோக்குடன்தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பது ஆரோக்கியமானவிடயம் அல்ல. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய அழுத்தங்கள் கொடுக்கப்படாவிடத்து மகிந்தராஜபக்ச ஆட்சிக்கு வந்தாலும், ரணில்விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தாலும் பெரிதாக எந்த மாற்றங்களும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

வீதிகள், கட்டடங்கள் என்னும் பௌதீக அபிவிருத்திகள் தேவைதான் எனினும், தமிழ் மக்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வது மிக அவசியமானதாகும். இருப்புக் கேள்விக்குறியாகும்போது இந்தப் பௌதீகஅபிவிருத்திகளால்தமிழ்மக்கள்எந்தப்பயனையும்அனுபவிக்கப்போவதில்லை. ஆனால்தமிழ்த்தலைவர்களால்குடியேற்றங்களை, காணி அபகரிப்புக்களைத் தடுப்பதற்கு அரசுக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பாக திருப்தியற்ற நிலமையை உள்ளது. வெள்ளம் வருமுன்னே அணை கட்டுவதே சிறப்பு என்பது முன்னோர்கள் வாக்கு, அதை உணர்ந்து செயற்படுவதே நன்மை பயக்கும்.



# அவதிக்குள்ளாகும் பன்னாட்டு அகதிகள்

இந்துமதி

அகதிகள் என்ற சொல்லைக் கேட்கும் போது இந்த நாட்டில் பரம்பரை, பரம்பரையாக வாழ்ந்த தமிழர்களின் இதயம் ஒரு கணம் திடுக்கிடவே செய்கின்றது. ஏனென்றால் உலக அளவில் அகதிகள் என்ற பதத்தின் கீழ் அவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மத்திய அமெரிக்க நாடுகள் சிலவற்றிலிருந்து மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவுக்குச் செல்ல முயன்ற அகதிகள் சிலரை மெக்சிக்கோ அரசு சிறைப்பிடித்ததைக் காட்டும் ஒளிப்படங்களைத் தாங்கிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. சிறைப்பிடிக்கப்பட்ட அகதிகள் சோகம் நிறைந்த முகங்களுடன் காணப்பட்டமை பலரின் மனங்களிலும் வேதனையை ஏற்படுத்தி விட்டது.

### பொருளாதாரப் பிரச்சினை

அந்த மக்கள் மிகவும் அபாயகாரமான பயணமொன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றமைக்கு ஏதோவொரு வலுவான காரணம் இருக்கத்தான் வேண்டும். மத்திய அமெரிக்க நாடுகள் பொருளாதார வளத்தில் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. அங்கு அமைதியான அரசியல் சூழ்நிலையும் காணப்படவில்லை. இதனால் அங்கு வாழ்கின்ற மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். இதனால் அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளுக்கு அக்திகளாகச் சென்று அடைக்கலம் தேடுவதற்கு முயற்சிக்கின்றனர். இன்று பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற நாடுகளிலிருந்து பெருமளவான மக்கள் புலம் பெயர்ந்து சென்று வேறு நாடுகளில் தஞ்சமடைவதைக் காண முடிகின்றது. இந்த மக்கள் மேற்குலக நாடுகளையே நாடிச் செல்கின்றனர். அந்த நாடுகளில் தஞ்சமடையும் போதுதான் தம்மால் ஓரளவு கவலையின்றிச் சீவிக்க முடியுமென இவர்கள் நம்புகின்றனர்.

### தமிழர்களும் விதிவிலக்கல்ல

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் ஆரம்பமானபோது அகதிகள் என்ற பெயருடன் பிற நாடுகளில் தஞ்சம் கோருவதில் தமிழர்கள் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் எமது அயல் நாடான இந்தியாவுக்கே அதிகளவான தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். வசதி படைத்தவர்கள் நண்பர்கள், உறவினர்களுடனும் வாடகை வீடுகளிலும் தங்க ஆரம்பித்தனர். வறிய நிலையில் உள்ளவர்கள் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அந்த முகாம்கள் போதிய வசதிகளுடன் காணப்படவில்லை. தமது சொந்த நாட்டில் தமது நிலைக்கு ஏற்ப ஓரளவு வசதிகளுடன் வாழ்ந்த மக்களுக்கு அகதிமுகாம் வாழ்க்கை கசக்கவே செய்தது. ஆனால் தமது தலைவிதியை நொந்து கொண்டு அங்கு வாழ்வதைத் தவிர வேறு வழியொன்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. இவர்களில் பலர் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதில் சிக்கல்கள் இருப்பதால் இந்தியாவில் தங்கியிருப்பதைத் தவிரவேறு வழியொன்றும் இவர்களுக்குத் தெரியவில்லை. இதன் காரணமாகவே அங்கு வாழ்கின்ற அகதிகளில் ஒரு பகுதியினர் தமக்கு இந்தியாப் பிரஜாவுரிமையை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சூழல் சரியில்லை

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. வன்செயல்கள் மற்றும் போர் காரணமாகப் புலம்பெயர்ந்து சென்று நீண்ட காலமாக இந்தியாவில் வேரூன்றி நிற்கும் இவர்கள் அந்த நாட்டுடன் பல்வேறு வகையிலும் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளனர். அங்கே பிறந்தவர்கள் அங்குள்ள கல்வி நிலையங்களில் கல்வி கற்று அந்த நாட்டின் பழக்க வழக்கங்களைத் தம்மிடத்தே கொண்டுள்ளனர். பலர் இந்தியார்களுடன் திருமண பந்தத்தையும் கொண்டுள்ளனர்.

அத்துடன் இவர்களில் பலருக்கு சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று வாழக்கூடிய சூழ்நிலையும் அமைந்திருக்கவில்லை. இதனால் எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் இந்தியாவில் வாழ்வதையே இவர்கள் விரும்புவதாகத் தெரிகின்றது.

இந்த மக்களைத் தாய் நாட்டுக்கு ஈர்க்க வேண்டுமானால் அவர்கள் இங்கு வந்து வாழக் கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இந்தியா தவிர்ந்த உலகின் வேறு பல நாடுகளிலும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நிலையில் வாழ்கின்றனர். போரின் போதும் அதற்குப் பின்னரும் இவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பி வைத்த பணம் அவர்களது உறவுக்குப் பெரிதும் உதவியதை நாம் மறந்து விட முடியாது. நிர்க்கதியான நிலையில் வாழ்ந்த அவர்களுக்கு புலம்பெயர் உறவுகள் உதவி செய்யாதிருந்தால் மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பார்கள் என்பதையும் மறந்து விட முடியாது.

### மேற்கு நாடுகளுக்கு நெருக்கடி

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும், சில ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் பெருமளவு அகதிகள் மேற்குல நாடுகளுக்குச் செல்வதால் அந்த நாடுகள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. அகதிகள் என்ற போர்வையில் பயங்கரவாதிகளும் தமது நாடுகளுக்குள் ஊடுருவியிருக்கலாமென்ற அச்சமும் அந்த நாடுகளில் காணப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்கா தமது நாட்டுக்குள் அகதிகள் எவரும் நுழைவதை அறவே விரும்பவில்லை. அமெரிக்காவுக்கு அயலில் உள்ள மெக்சிக்கோ நாட்டின் ஊடாகவே பெருமளவு அதகிதகள் அமெரிக்காவுக்குள் நுழைவதால் தமது நாட்டுக்கும் மெக்சிக்கோவுக்கும் இடையிலான எல்லையில் தடுப்புச் சுவரொன்றை அமைப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா அரச தலைவரான டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டார். இதற்கு மெச்சிக்கோ இணங்கவில்லை. எல்லைச் சுவர் கட்டுவதற்கு ஆகும் செலவில் பாதியை ஏற்குமாறு அமெரிக்காவின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டமையே இதற்கான முதன்மை காரணமாகும். எல்லைச் சுவர் கட்டுவதற்குப் பதிலாகத் தமது நாட்டின் எல்லையூடாக அமெரிக்கா செல்பவர்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மெக்சிக்கோ நாடு தற்போது ஈடுபட்டுள்ளது.

எதிர்காலத்தில் தமது நாடுகளிலிருந்து வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்வதென்பது கடினமாகவே இருக்கப் போகின்றது. இதனால் உண்மையான பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களின் நிலைதான் பரிதாபமான கட்டத்தை எட்டப்போகின்றது.

# வலி.வடக்கில் காணி விடுவிப்பு இன்னமும் முழுமை பெறவில்லை

## தவிசாளர் சோ.சுகிர்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

**வலிகாமம் வடக்கில் இன்னும் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. அந்தக் காணிகளை விடுவித்தாலே வலி. வடக்கில் காணிவிடுவிப்பு முழுமைபெறும். இவ்வாறு வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.**

தையிட்டிப் பகுதியில் 26 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. இந்த நிகழ்வின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களுடைய 26.4 ஏக்கர் காணிகள் இன்று விடுவிக்கப்பட்டுள்ளன. தையிட்டி தெற்கு, தையிட்டி வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. 45 குடும்பங்களுடைய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மக்களுடைய வீடுகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தாலும் மக்கள் குடியேறக்கூடிய நிலையில் உள்ளது. இதனுடன் இணைந்த ஏனைய பகுதிகளும் விடுவிக்கப்படவேண்டும். அதன்மூலமே தையிட்டிக் கிராமத்தின் மீள்குடியமர்வு துரிதமாகும். தையிட்டி வடக்கில் இராணுவத்தின் மகளிர் பிரிவின் முகாமும், அதற்கு முன் இருக்கிற பொறியில் முகாமும் அகற்றப்படவேண்டும்.

பலாலி வடக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை கட்டுவதற்காக ஒரு ஏக்கர் நிலமும் பலாலி வடக்கில் விடுவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மிகுதி நிலங்களும் விடுவிக்கப்படவேண்டும். கிட்டத்தட்ட இன்னும் 3ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி மக்களுடைய மீள்குடியமர்வுக்காக விடுவிக்கப்படவேண்டியுள்ளது. அதை விடுவிப்பதன் மூலமே வலிகாமம் வடக்கின் மீள்குடியமர்வு துரிதமடையும்.

தற்போது இங்கிருந்து செல்கின்ற இராணுவத்தளபதி, யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்று இதுவரை பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளார். அவர் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகின்றோம். புதிதாக யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற தளபதியும், மக்களின் ஏனைய இடங்களையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஓ.5,21,26)

# பாதுகாப்புக்கு பங்கமில்லாத காணிகளையே விடுவிப்போம்

## விடைபெறும் ராணுவத் தளபதி பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 13


வலி. வடக்கில் படையினரின் பாதுகாப்புக்கு பாதகம் இல்லாத காணிகளையே விடுவிப்போம் என்று, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விடைபெறும் இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தையிட்டியில் ஒருதொகுதி காணி மக்கள் பாவனைக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் வசமிருந்த ஒரு தொகுதிக் காணிகளை கடந்த காலத்தில் விடுவித்திருந்தோம். இன்று 27 ஏக்கர் காணிகளை மக்களிடம் கையளித்திருந்தோம். எதிர்காலத்திலும் காணிகளை விடுவிப்போம். படையினரின் பாதுகாப்புக்கு குந்தகம் இல்லாத காணிகளையே மக்களிடம் கையளிப்போம் - என்றார்.

இராணுவத் தளபதி வலி.வடக்கில் காணிகளை விடுவித்தமையை பாராட்டி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் மதிப்பளிக்கப்பட்டது. (ஓ.5,21,26)



# 29 ஆண்டுகளாகியும் மங்காத சரஸ்வதி படம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு 29 ஆண்டுகள் விடுவிக்கப்படாதிருந்த வீட்டில் சரஸ்வதி படம் காணப்பட்டது. இடப்பெயர்வின் போது விட்டுச் சென்ற படமாக இருக்கலாம் என்று அந்த வீட்டுக் குச் சென்றவர்கள் தெரிவித்தனர். படத்தில் உள்ள சரஸ்வதி அழிவடையாத நிலையில் காத்திருந்தது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

வலி.வடக்கில் நேற்று விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் மக்கள் சென்றனர். அங்கு உடைந்த நிலையில் வீடு ஒன்றின் அறையில் சரஸ்வதி படம் காணப்பட்டது.

இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த இடத்தில், சரஸ்வதி படம் இன்றுவரை உடைக்கப்படாமல், அல்லது அழிவடையாமல் இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டனர். வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் ஏன் வீட்டுக் கூரையே இல்லாத நிலையில் அந்தப் படம் மட்டும் எஞ்சிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. (ஓ.5,21,26)

# தமிழருக்கு நீதி கிடைக்க கடவுள் உதவ வேண்டும்

## ஆளுநர் ராகவன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழ் மக்களுக்கு நான்கு விடயங்கள் கட்டாயமாகக் கிடைக்க வேண்டும். அவர்களுடைய நிலம் கிடைக்கவேண்டும். நீர் கிடைக்கவேண்டும். நிதி கிடைக்கவேண்டும். அவை எல்லாவற்றுக்கும் மேலாக நீதி கிடைக்கவேண்டும். அது கிடைப்பதற்கு இறைவன் உதவிசெய்ய வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் ஒரு தொகுதி காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. இவற்றை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.வடக்கில் நாங்கள் 53 ஏக்கர் காணிகளை அளந்துகொண்டிருக்கின்றோம். அந்தக் காணிகளின் உரிமையாளர்களிடம் அவற்றை விரைவில் கையளிக்க முயற்சிக்கின்றோம். இந்த மாத நிறைவிலே அது நடக்கும் என்பது என்னுடைய அவா.

நீங்கள் உங்களுடைய உரிமையைப் பெறுவதில் நான் அதிகளவு சந்தோசப்படுகிறேன். நான் ஒரு நாளும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற சிந்தனையுடன் வேலை செய்யவில்லை. நான் தற்செயலாக ஆளுநராக வந்தவன். தமிழ் தேசத்தின் வலியில், வேதனையில், விளிம்பிலிருந்து நாங்கள் மீளப்பெற்று இன்னுமொரு அபிமானமாக இளைஞர்களாக வாழவேண்டும் என்ற கனவைச் சுமந்துள்ளோம். அந்தக் கனவின் பாரம், எமது பாதையை இன்னும் பலப்படுத்தவேண்டும். நாங்கள் போகவேண்டிய திசையைத் தீர்மானிக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு அரசியல்வாதிகளும், அரச அலுவலர்களும் ஒன்றுபடவேண்டும். கண்ணீருடனும் கஸ்ரத்துடனும் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கையில் நாங்கள் ஒளியேற்றுவதற்காக எங்களை அர்ப்பணிக்கவேண்டும். அந்தப் பணியைச் செய்வதற்கு எனக்கு உதவிசெய்யுங்கள். அரசியல் கட்சிகளோ, வர்ணங்களோ, கொடிகளுக்கோ அப்பாற்பட்டு நான். என்னுடைய பணியைச் செய்ய விரும்புகிறேன். எனக்கு உங்களுடைய ஆதரவு வேண்டும். உங்களுடைய உதவிக்கரம் வேண்டும்.

அப்படி இருக்கும்போதுதான் மிகுதியாக இருக்கின்ற கனவுகளிலே நாங்கள் செய்துமுடிக்க வேண்டிய பணிகளை நோக்கி ஓடக்கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாண கட்டளைத் தளபதி எம்மை விட்டுச் செல்லும் போது மதிப்பாகச் செல்கின்றார். தமிழ் பேசும் மக்களுடைய வாழ்க்கையிலே அவர் ஒளியை ஏற்றிவிட்டுத்தான் போகின்றார். அவர்போன்ற இனவாதம் இல்லாத நேர்மையான அலுவலர்களின், இராணுவ அதிகாரிகளுடைய பெயர்ப்பட்டியல் எழுதப்படவேண்டும். அவருடைய பேரப்பிள்ளைகள் சந்தோசப்படும். அவர் வெறுமனே காணியைத் திருப்பிக்கொடுப்பது மட்டுமல்ல ஜனநாயகத்தின் பாதையை உருவாக்குவதும், மனித உரிமையைப் பேணுவதுமாகச் செயற்பட்டுள்ளார். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மறைமுகமாகவோ, நேரடியாகவோ இனவாதியாக தன்னுடைய அரசியலை முன்வைக்கவில்லை. அவர் இந்தப் போருக்கான காரணத்தை நீக்க வேண்டும், அந்தப் போரில் ஏற்பட்ட தாக்கத்தை நீக்கவேண்டும். அதற்கான இழப்பீடுகள் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அதற்குச் சாவால்களும் இருக்கின்றன. என்னை ஆளுநராக அனுப்பும் போது 13ஆவது திருத்தத்திலே என்னென்ன இருக்கின்றதோ, தமிழ் மக்களுடைய உரிமைகள் என்ன இருக்கிறதோ அதை ஒன்றும் விடாமல் நீங்கள் செய்துமுடிக்கவேண்டும். தமிழ்மக்களிடம் நாங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் என்னுடைய முகவராக நீங்கள் சென்று அந்த மக்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று கூறியிருந்தார். அதைத்தான் நான் செய்துகொண்டிருக்கிறேன் - என்றார். (ஓ.5,21,26)

# விபத்தில் மாணவன் காயம்

வவுனியா, ஜூலை 13

வவுனியா, தொடருந்து நிலைய வீதியில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஈருருளியில் பயணித்த மாணவர் ஒருவரே காயமடைந்துள்ளார்.

தொடருந்து நிலைய வீதியுடாக துவிச்சக்கரண்டியில் பயணித்த மாணவர்கள் பண்டாரிக்குளம் நோக்கி பாதையின் மறுபக்கம் மாற முற்பட்ட சமயத்தில் தொடருந்து நிலைய வீதியுடாக குருமன்காடு நோக்கி வேகமாக வந்த உந்துருளி வீதியைக் கடக்க முயன்ற உந்துருளி மீது மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை பண்டாரிக்குளம் பொலிஸ் காவல் அரணில் இருந்த பொலிஸார் மேற்கொண்டனர். (எ)




# மாங்குளத்தில் கடும் காற்று மரங்கள், வீடுகள் சேதமாகின

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீசிய கடும் காற்றால் பல வீடுகள் மற்றும் மரங்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.





அங்கு வெப்பத்துடன்கூடிய வறட்சி நிலவிவரும் நிலையில்சில இடங்களில்நேற்று முன்தினம் மழை பெய்தது. மாலை 4.30 அளவில் மாங்குளம் பகுதியில் வீசிய கடும் காற்றால் வீதியோரங்களில் நின்ற மரங்கள் பல முறிந்தன. போக்குவரத்துத் தடைப்பட்டது. பொது மக்களின் காணிகளிலுள்ள பயன்தரு மரங்கள் பல நாசமாகின.

மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 9 வீடுகளும், தச்சடம்பன் பகுதியில் ஒரு வீடும், புலுமச்சிநாதகுளம் பகுதியில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த வீடுகளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் த.அகிலன், மாங்குளம் கிராம அலுவலர் தனபால்ராஜ், அம்பகாமம் பதில் கிராம அலுவலர் ரஞ்சிதகுமார், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் முகுந்தகஜன் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டுள்ளனர். (த-ரி3)

## சிகிச்சை பயனின்றி முதியவர் சாவு

சாவகச்சேரி, ஜூலை 13

வீதி விபத்தில் காயமடைந்த 71 வயது முதியவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார்.

முகமாலை மடத்தடியில் வசித்த வினாசித்தம்பி மகாலிங்கம் (வயது- 71) என்ற முதியவரே உயிரிழந்தார்

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் மீசாலை கிழக்கில் வசித்து வந்தார். முகமாலையில் உள்ள காணி அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதால் நேற்று முன்தினம் தனது காணியைப் பார்த்துவிட்டு மாலை 5.30 மணியளவில் மீசாலை கிழக்கில் உள்ள வீட்டுக்கு ஈருருளியில் திரும்பிய வேளையில் எழுதுமட்டுவாழ் தவறணைக்கு முன்பாக அதே திசையில் வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் காயமடைந்தார்.

அங்கு நின்றவர்கள் அவரை வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சை பயனின்றி அன்று இரவே சாவடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதியவரின் சாவு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் இதே இடத்தில் கெற்பேலியைச் சேர்ந்த 64 வயது முதியவர் வாகனத்தால் மோதுண்டு காயமடைந்தார். (ஐ-9-159)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடமராட்சி, ஜூலை 13

யாழ்ப்பாணம் வடமராட்சி வலயத்தில் உள்ள வல்லை சிவகுரு வித்தியாசாலையில் வெற்றிடம் ஏற்படவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகளின் தகமைகளாக இலங்கை அதிபர் சேவையில் தரம் 2,3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையில் அதிபராகக் கடமையாற்றாதவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாகச் சேவையாற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 29 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப்பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இரு செயலர்களுக்கு வடக்கில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடக்கில் கடந்த மாதம் இரண்டு செயலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில், மேலும் இரண்டு செயலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் செயலராக திருமதி ரூபினி வரதலிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டார். மகளிர் விவகாரம் மறு வாழ்வளித்தல் சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், வர்த்தக வாணிப அமைச்சின் செயலராக ஆர்.வரதீஸ்வரன் இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இடமாற்றங்கள் நாளை மறுதினம் 15ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் புதிய செயலராக எல். இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் புதிய செயலராக சி.சத்தியசீலன் ஆகியோர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-7)



## குளம் சீரமைப்பு

கொடிகாமம், ஜூலை 13

கொடிகாமம் வடக்கு ஜே/326 கிராம அலுவலர் பிரிவிலுள்ள எருவன் கட்டுக்குள பிள்ளையார் ஆலயக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குளம் 50 ஆண்டுகளுக்கு மேலாக சீரமைப்பு இன்றிக் காணப்பட்டது.

இந்த நிலையில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கிலும் எதிர் கால சந்ததியினரைக் கருத்தில் கொண்டும் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கிலும் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வரணிப் பிரதேசத்தில் போக்கன் கிராமத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் சீரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. (ஐ-159)

## பாடசாலை நிகழ்வுகள்



### கற்றல் உபகரணக் கண்காட்சி

கொடிகாமம், ஜூலை 13

உசன் இராமநாதன் வித்தியாலயத்தின் கற்றல் உபகரணக் கண்காட்சி பாடசாலை வளாகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல.லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் ஆகியோர் கலந்து கொண்டனர் கற்றல் வள நிலையத்துக்கு தேவையான புதிய உபகரணங்கள், மாணவர்கள் ஆசிரியர்களின் ஆக்கங்கள் மற்றும் நவீன கற்பித்தல் சாதனங்கள் எனப் பலதரப்பட்ட கற்றல் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ஐ-159)



### சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம்

கொடிகாமம், ஜூலை 13

யாழ்ப்பாணம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம் அண்மையில் இடம்பெற்றது.

அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன் கலந்து கொண்டார். (ஐ-159)



### உணவு ஆக்கப் பொருள்களின் கண்காட்சி

கிளிநொச்சி, ஜூலை 13

சுகாதாரத் திணைக்களத்தின் போசாக்கு மாத நிகழ்வாக உணவு ஆக்கப் பொருள்களின் கண்காட்சி நேற்றுக் காலை திருவையாறு மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் த.சுரேந்திரனால் கண்காட்சி நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகமும் வேள்ட் விஷன் லங்கா நிறுவனமும் இணைந்து நடத்திய இந்தக் கண்காட்சியில் கிளிநொச்சி பிரதேச மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-9)



வரணி வடக்கு அ.த.க பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை பாடசாலை வளாகத்தில் அதிபர் த.வசந்தரூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ-159)

# வடக்கு ஆளுநரிடம் 5 கோரிக்கைகள் விவசாய சம்மேளனம் முன்வைத்தது

## உரியவர்களுடன் பேசி நடவடிக்கையென்று ஆளுநர் உறுதி

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளன பிரதிநிதிகள் 5 கோரிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைத்துள்ளனர். அவற்றை உரியவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கிறேன் என்று ஆளுநர் உறுதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.



வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடல் நடைபெற்றது. அதன்போது 5 கோரிக்கைகளை சம்மேளனப் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

1.மாவட்டத்தில் நீர் முகாமைத்துவத்தைச் சரியாகப் பேணவேண்டும் எனில்வெற்றிடமாக உள்ள நீர்ப்பாசன பராமரிப்பு அலுவலர்கள்நியமிக்கப்பட வேண்டும். மாவட்டத்தில் 26 பேருக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. வடக்கு மாகாணத்தில் 7 நீர்ப்பாசனப் பொறியிலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. கிளிநொச்சியில் ஒரு பிரிவு மாத்திரம் காணப்படுவதால் வடக்கு மாகாணப் பயிர்செய்கையில் இந்தப் பிரிவு 48 வீதமாகக் காணப்படுகின்றது. ஏனைய 6 பிரிவுகளும் 52 வீதமானவற்றைக் கவனிக்கின்றன. இதன் பணிச்சுமையைக் குறைப்பதற்காகவே கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவை இரண்டாகப் பிரிக்க வேண்டும்.

3. திட்ட முகாமைத்துவக் குழு உருவாக்கம்.

4. விவசாய இரசாயனங்களை மாவட்டத்துக்கு ஏற்றால் போல் பரீட்சித்து பாவனை செய்வதற்கான வழிமுறைகள்.

5. உழவர் சந்தை ஒன்றை உருவாக்க வேண்டும்.

ஆகிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இவைகள் தொடர்பாக ஆராய்ந்து உரியவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களச் செயலர், மாவட்ட மற்றும் இரணைமடு விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (து-6)

### ஒன்று கூடல்

யாழ்ப்பாணம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலைமுதன்மைமண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் ஜெ. நிருஷன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உதவிப் பொறியியலாளர் க.அருள்குமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-159)

### மானிய நிதியை பெற முடியும்

சனசமூக நிலையங்களுக்கான வருடாந்த மானியம் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள் உடனே மானிய நிதியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தவிசாளர் அ.ஜெபநேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

2018 சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை மூத்த சனசமூக அபிவிருத்தி அதிகாரி சிவகாமி பகீரதனின் நேரடிக் கண்காணிப்பு பரிசோதனையின் கீழ் சனசமூக நிலையங்களுக்கான மானிய நிதியாக ரூபா 10 ஆயிரம் வழங்கப்பட்டுவருகின்றது. இதுவரை 52 சனசமூக நிலையங்கள் நன்கொடை நிதியை பெற்றுள்ளன.

இதுவரை பெற்றுக் கொள்ளாத சனசமூக நிலையங்கள் மூத்த சனசமூக அபிவிருத்தி அதிகாரியை சந்தித்து கொள்வதன் ஊடாக நடவடிக்கைகளைமேற்கொள்ளலாம் என தவிசாளர் அறிவித்துள்ளார். (ஐ-50)

### பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

காரைநகர்.ஜூலை 13

காரைநகர் பிரதேசக் கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் பொதுக்கூட்டமும், கலைஞர் எழுத்தாளர் ஒன்றுகூடலும் நடைபெறவுள்ளன.

காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த ஒன்றுகூடலில் சிறப்புக் கலை நிகழ்வுகளாக வ. பன்னிருகையனின் ஹார்மோனிய இசை விருந்தும், சி.தங்கவேலு, வே.மாரிமுத்து ஆகியோரின்உடுக்கு இசைச் சங்கமமும், வெடியரசன் கலாமன்றத்தினரின் நாடகப் பாடல்களின் ஆற்றுகை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. காரைநகர் பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஐ)

### சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம்

கொடிகாமம், ஜூலை 13

யாழ்ப்பாணம் குடமியன் அ.த.க பாடசாலையின் சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம் வித்தியாலய வளாகத்தில் நேற்றுக் காலை அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ. மயில்வாகனம் கலந்து சிறப்பித்தார். (ஐ-159)



### சபைகளின் தவிசாளர்களும் வாகனங்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் மூலம் சபைகளின் தவிசாளர்கள் வாகனங்கள் பெற விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகள்- உள்ளூராட்சி அமைச்சின் கடன்பிரிவு இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கையை முன்வைத்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் தெரிவாகிய சபைகளின் தவிசாளர்கள் தமது வாகனங்களின் தேவை குறித்த முன்மொழிவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்தே உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் மூலம் இதற்கான முன்மொழிவை முன்வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகளில் 5 சபைகளே 'ஏ' தரத்தில் உள்ள சபைகளாக அதாவது வருமானத்தை உயர்வாக எட்டக் கூடிய சபைகளாக உள்ளன. ஏனைய சபைகள் வருமானங்கள் குறைந்த சபையாகவே இனங்காணப்பட்டுள்ளன.

எனவே சபை வருமானம் குறைந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கு வாகனங்களை அமைச்சு எவ்வித கொடுப்பனவும் அற்ற முறையில் வழங்குவதையே விரும்புகின்றோம் என்று தவிசாளர்கள் தெரிவித்துள்ளனர். (து-50)

### அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலி

வலி.தென்மேற்கு, ஜூலை 13

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரும் நாடறிந்த தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 30ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் நடைபெறவுள்ளது.


அ. அமிர்தலிங்கம்


வெ. யோகேஸ்வரன்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உப செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

அமரர் அ.அமிர்தலிங்கத்தின் நினைவாக வட்டுக்கோட்டை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் அன்றைய தினம் காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை குருதிக்கொடை முகாம் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

இதேவேளை, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 30ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு பண்ணாகத்திலுள்ள அமரரின் சிலைக்கு முன்பாக இடம்பெறவுள்ளது. பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளைத் தலைவர் கே.கௌரிகாந்தன் உட்படப் பலர் உரையாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமரர்கள் அ. அமிர்தலிங்கம், மற்றும் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 30ஆவது நினைவு தினம் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இது நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-115)

### ரூ. 30 லட்சம் நிதியில் இரு வீதிகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் உயரப்புலம் ஜே/132 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள இரு வீதிகள் 30 லட்சம் ரூபா செலவில்சீரமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒதுக்கியுள்ளதுடன் வீதிகளின் சீரமைப்பு பணிகளுக்கான அடிக்கல்லையும் நட்டு வைத்தார்.

நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் அ. ஜெபநேசன், உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மீள்சீரமைப்பு இன்றி நீண்டகாலமாக காணப்பட்ட வீதிகளின் நிலமை குறித்து அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உபதவிசாளர் ஆ.சி.கணேசவேல் முன்மொழிவு பத்திரத்தை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனிடம் வழங்கியிருந்தார்.

இத்னையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் உயரப்புலம் வராகி கோயில் வடக்கு வீதி (200 மீற்றர்), உயரப்புலம் ஆடியபாதம் முதலாம் வீதி (150 மீற்றர்) ஆகிய இரு வீதிகளையும் சீரமைப்பு செய்ய நிதி ஒதுக்கியுள்ளார். (ஐ-50)

### பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், நாளைமறுதினம் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் தெரிவித்தனர். (ஐ-159)

### பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

யாழ்ப்பாணம்நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என்று சங்கச் செயலர் மா.நாகேந்திர சீலன் தெரிவித்துள்ளார். (ஐ)

### கலந்துரையாடல்

வவுனியா,ஜூலை 13

வவுனியா சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "நவீன உலகில் தொலைபேசி பாவனையும் 5ஜி தொழில்நுட்பமும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

வவுனியா பூந்தோட்ட சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இ.ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ளது. கருத்துரையை கால்நடை மருத்துவர் சி.கிருபானந்தகுமாரன் வழங்கவுள்ளார். (ஐ)

# பொலிஸ் திடீர் சுற்றிவளைப்பு; 3 வாகனங்களுடன் 9 பேர் கைது

வவுனியா,ஜூலை 13

வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக மரக்கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குஎதிராகமேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 3 வாகனங்களுடன் 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 20 லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளையும் கைப்பற்றப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்பட்ட சிறப்பு பொலிஸ் குழுவினர் கடந்த மூன்று தினங்களாக வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிக்குளம், புதூர், பரசங்குளம், அனந்தப்புளி



யங்குளம் பகுதிகளில் திடீர் சற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

இதன்போது 20 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை குற்றிகள் 35, தேக்கங்குற்றிகள் 15 என்பனவற்றைக் கைப்பற்றினர்.

கடத்தலுக்குப் பயன்படுத்திய பாரஊர்தி, பட்டா ரக கப் 3 வாகனங்கள் ஆகியவற்றுடன் சந்தேக நபர்கள் 9 பேரையும் கடந்த மூன்று தினங்களில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றிய பொருள்களுடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் மருத்துவமனையில்

முல்லைத்தீவு,ஜூலை 13

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வளாகத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வளாக கட்டடத்தின் முன் பக்கத்தில் இரண்டு குளவி கூடுகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று கலைந்து அங்கு சென்றவர்கள் மீது கொட்டியுள்ளது.

இதில் அரச அலுவலகர், காவலாளி உட்பட ஐந்து பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நாளாந்தம் பல மக்கள் அரசசேவைகளை பெறுவதற்காக பிரதேச செயலகம் வந்து செல்லும் நிலையில் குறித்த குளவிகூடு கலைந்தமையால் அங்கு செல்லும் அரச அலுவலர்கள் உட்பட பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஐ-ரீ3)

## 22 கிலோ கஞ்சா வைத்திருந்தாரென கைதானவருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஜூலை 13

22 கிலோக்கிராம் கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி பொலிஸார் ஒருவரை நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுத்துறையில் மூன்று தினங்களுக்கு முன்னர் சிறப்பு அதிரடிப் படையினர் அவரைக் கைது செய்திருந்தனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-6)

## அனுமதியின்றிமணல்ஏற்றினரென 13 சாரதிகள் பொலிஸாரால் கைது

### குற்றவாளிகள் இருவருக்குத் தலா 50,000 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 13

கடந்த மூன்று தினங்களில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 4 டிப்பர் வாகனங்களும் 8 உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தலைமையில் இயங்கும் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் மயில்வாகனபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய மூன்று உழவியந்திரங்களையும் அதன் சாரதிகளையும் கைது செய்து மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

அதேபோல் பன்னங்கண்டி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 5 உழவியந்திரங்களையும் அவற்றின் சாரதிகளையும் கைது செய்து மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இத்தாவில் பகுதியில்அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்துடன் சாரதி நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இயக்கச்சி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

வேம்பொடுகேணி பகுதியில்அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனங்களுடன்சாரதிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். வேம்பொடுகேணியில் கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவரும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இந்த இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த- 6)





### வடக்கில் சிறப்பாகச் செயற்பட்டதற்காக

## நானாட்டான் பிரதேச சபைக்கு வெள்ளிப் பதக்கம் கையளிப்பு

மன்னார், ஜூலை 13

வடக்கு மாகாண ரீதியில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில், வினைத்திறனாகவும் சிறப்பாகவும் செயற்பட்டமைக்காக மன்னார் மாவட்ட நானாட்டான் பிரதேச சபைக்கு தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கம் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த விருது மற்றும் சான்றிதழை வைபவரீதியாக நானாட்டன் பிரதேச சபைத் தவிசாளரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

நானாட்டான் பிரதேசசபை மண்டபத்தில் இது நடைபெற்றது.

நாடாளுமன்ற அரசகணக்குக் குழுவு 2017ஆம் ஆண்டுநடத்திய அரசஅலுவலகங்களின் நிதிக் கோட்பாடுகளுக்கு இணங்குதலுக்கான மதிப்பீட்டுச் செயற்பாட்டில் வினைத்திறனாகச் செயற்பட்டமைக்காக வடக்கு மாகாணத்தின் 12 அமைச்சுக்கள் மற்றும்திணைக்களங்களுக்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் தங்கப் பதக்கங்கள் வழங்கி மதிப்பளித்திருந்தார்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண ரீதியில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் வினைத்திறனாகவும்சிறப்பாகவும்செயற்பட்டமைக்காக நானாட்டான் பிரதேச சபைக்குத் தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கம் கிடைக்கப் பெற்றது.

நிகழ்வில் நானாட்டன் பிரதேச சபைத் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, நானாட்டான் பிரதேச சபைச் செயலர் ஜோகேஸ்வரம் உட்பட நானாட்டன் பிரதேச சபை உப தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் நானாட்டான்பிரதேச சபை மாத்திரமே தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

## மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலை முதன்மை மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் சவிரி.பூலோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன், மதிப்புறு விருந்தினராக பழைய மாணவனும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபருமான கி.விக்கினராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

## ஆங்கிலக் கருத்தமர்வு

கொடிகாமம், ஜூலை 13

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க பாடசாலையில் தரம் 2 மாணவர்களுக்கான வாய்மொழி மூலமான ஆங்கிலக் கருத்தமர்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன் கலந்துகொண்டார். (ஐ-159)





## பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம் மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு சிறி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு அபிஷேகமும்மாலை6மணிக்கு விளக்கு வைத்தலுடன் பொங்கல் ஆரம்பமாகி நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## இசையரங்கு

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் 'இசையரங்கு'எதிர்வரும்16ஆம்திகதி கொழும்பு கம்பன் கோட்டத்தில் மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

செல்வி வைஷாலி யோகராஜனின் பாட்டு, திருமதி மதுரா பாலச்சந்திரனின் வயலின், அம்பலவாணர் ரகுநாதனின் மிருதங்கம் ஆகியோரின் இசையரங்கு இடம்பெறவுள்ளது. (ஐ-159)

## ஆண்டாங்குளம் பாடசாலையில் புதிய இரு கட்டடங்கள் திறப்பு



மன்னார், ஜூலை 13

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் பாடசாலையில் 25 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இரண்டு கட்டடங்கள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

'அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ் கொழும்பு கல்வி அமைச்சு இவற்றை அமைத்திருந்தது. ஆரம்ப பிரிவு கற்றல் வள நிலையம் மற்றும் இடைநிலை விஞ்ஞான ஆய்வு கூடம் ஆகியவையே திறந்து வைக்கப்பட்டன.

ஆண்டாங்குளம் மகா வித்தியாலய அதிபர் பு.அந்தோனிப்பிள்ளை தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

குறித்த கட்டடங்களை அமைக்கவென்று 2016 இல் அடிக்கல் நடுகை செய்யப்பட்டிருந்தது.

இவற்றைத் திறந்துவைக்கும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண பொறியியலாளர், மடு உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், நிர்வாக அலுவலர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தனர். (த-56)

## இலவச மருத்துவ முகாம்

கொழும்புத்துறை,ஜூலை 13

இலவச மருத்துவ முகாம் திருநெல்வேலி பொதுச் சந்தை வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, யாழ்ப்பாண நீரிழிவுக் கழகம், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து இந்தமருத்துவமுகாமை ஏற்பாடு செய்துள்ளன.



சந்தை வியாபாரிகள், நுகர்வோர் நன்மை கருதி இடம்பெற்ற இலவசமருத்துவமுகாமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாயம் மற்றும் குடும்ப மருத்துவத்துறை தலைவர் மருத்துவர் பி.ஏ.டி.கூஞ்ஞ ஆரம்பித்து வைத்தார்.

மருத்துவ முகாமில் நீரிழிவு, குருதி அழுத்தம்,கண், பி.எம்.ஐ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவ முகாம் மூலம் 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பயனடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கணித திறன் வகுப்பறை நேற்று திறந்து வைக்கப்பட்டது.



கல்லூரியின் அதிபர் திருமதி. சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் கா.சந்திரபாலனால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் வகுப்பறையை வர்ணம் தீட்டிப் புதுப்பித்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் கல்லூரியின் 2008ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் தமது நிதிப் பங்களிப்பில் மேற்கொண்டிருந்தனர்.




# மூன்றாம் நிலைக் கல்வியில் மாற்றங்கள் பல வரவேண்டும்

## *மத்திய வங்கி ஆளுநர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம், ஜூலை 13*

*இலங்கையின் ஆரம்ப மற்றும் நடுத்தர கற்றல் முறைகள் சிறப்பாக உள்ளன. ஆனால் மூன்றாம் நிலைக் கல்வி சற்று மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். தொழில் சார் ,தொழில்நுட்பம் சார் ஆங்கிலம் சார்ந்த கற்கை நெறியாக அமைய வேண்டும். அப்போது தான் அனைவரும் தொழில் தகமைகளைப் பெற்று வாழ்க்கையில் உயர முடியும்.*



இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் குமாரசாமி இந்திரஜித் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில பாடசாலை மாணவர்களுக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலம் மாணவர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. இப்போது உள்ளவசதிகள் எமது காலத்தில் காணப்படவில்லை. ஆனால் உங்களுக்கு அனைத்து வசதிகளும் உள்ளன. ஆகவே நீங்கள் உங்களை உயர்த்தி கொள்ள வேண்டும். அன்று யப்பானுக்கு அடுத்த படியாக பொருளாதார முன்னேற்றத்தில் எமது நாடு வளர்ச்சி கண்டு வந்தது. ஆனால் இப்போது ஆசிய நாடுகள் அனைத்தும் எம்மை முந்திக் கொண்டு சென்று விட்டன. அரசியல் பொருளாதாரத்தில் சிக்கலான தன்மை காணப்படுகிறது. அதற்கு ஏற்றால் போல நீங்கள் வித்தியாசமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது நாம் முன்னேற முடியும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் ஏற்பட்ட வெடி குண்டுத் தாக்குதலை அடுத்து நாம் சுற்றுலாத் துறையில் வீழ்ச்சி அடைந்தோம். தற்போது நாம் அதிலிருந்து மீண்டு வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கின்றோம். தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை சீராக உள்ளது. மக்களுக்குப் பல கடன் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் வட்டி வீதங்களைக் குறைப்பது தொடர்பிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழில் நுட்பம் வளர்ச்சி அடைந்து கொண்டு செல்லும் காலத்தில் நாம் உள்ளோம். 4 ஆவது தொழில் நுட்பப் புரட்சி வரவுள்ளது. ஆகவே அதற்கு ஏற்றாற் போல நாம் கல்வியுடன் கூடிய பயிற்சி நெறிகளை முன்னெடுக்க வேண்டும். பலத்த சாவால்களின் மத்தியில் தான் மத்திய வங்கி ஆளுநராக பொறுப்பேற்றேன். ஊழியர்களின் கடின உழைப்பால் இன்று வரை சீராக உள்ளோம். அதற்காக இங்கு எல்லாம் சரியாக உள்ளது என்று சொல்ல மாட்டேன். தலைமைத்துவம், திட்டமிடல் போன்ற விடயங்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்வதற்குக் குழு விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். முன்னைய காலத்தில் எமக்கு தனியார் கல்வி நிலையங்கள் இல்லை. அதனால் மாலையில் விளையாடுவதற்கு நேரம் கிடைத்தது.

மத்திய வங்கியைப் பொறுத்த வரையில் அரசியல் மயம் என்பது குறைந்ததாகக் காணப்படுகிறது. நிதி நிறுவனங்கள் சில அவ்வாறு தான் செயற்படுகிறன. அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

இலங்கையின் ஆரம்ப மற்றும் நடுத்தர கற்றல் முறைகள் சிறப்பாக உள்ளன. ஆனால் மூன்றாம் நிலைக் கல்விசற்றுமாற்றங்களுக்கு உட்பட வேண்டும். தொழில் சார் ,தொழில்நுட்பம் சார் ஆங்கிலம் சார்ந்த கற்கை நெறியாக அமைய வேண்டும். 20 வீதமான மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஏனைய ஆசிய நாடுகளை விட பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. மேலதிக துறை சார் பல்கலைக் கழகங்களை உருவாக்குவதில் அரசியல் பிரச்சினைகள்காணப்படுகின்றன. தனி யாருடன் சேர்ந்து மூன்றாம் நிலைக் கல்விக்கு அரசு வலுச் சேர்க்க வேண்டும் - என்றார். நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலர், மத்திய வங்கி அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(த-7)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா ரூ. 50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 13



மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கும், மதுபோதையில் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகனவரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துவோருக்கான தண்டத் தொகை அதிகரிக்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையில் சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு இரு குற்றங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 13

யாழ்ப்பாணம் குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நற்கருணை வழிபாடு நாளைமறுதினம் திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

திருவிழா திருப்பலி எதிர் வரும் 16 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 6 மணிக்கும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் நடைபெறும் என்று பங்குத் தந்தையர்களும்,பங்கு மக்களும் அறிவித்துள்ளனர். (ஐ)

# குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவிடுங்கள்

## நானாட்டான் அச்சங்குளம் மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூலை 13

மன்னார் நானாட்டான் அச்சங்குளம் கிராமத்துக்கு நிரந்தரக் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தித் தருமாறு அங்குள்ள 35க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது பற்றிய கோரிக்கைக் கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகனிடம் வழங்கியுள்ளனர்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாகப் பல வருடங்களாக நானாட்டான் பிரதேச செயலகம், நானாட்டான் பிரதேச சபை, மாவட்டச் செயலகத்துக்குத் தெரியப்படுத்தியும் நிரந்தரக்குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் தரவில்லை என்று அவர்கள் கூறிக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது கடற்கரைப் பகுதி என்பதால் கிணறுகளின் தண்ணீர் உப்பாகவுள்ளது.

நல்ல தண்ணீர் எடுப்பதற்கு ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

குடிதண்ணீர் உள்ள வீடுகளில் மாலை ஆறு மணிக்கு மேல் செல்ல இயலாது. அவர்கள் வெளியே செல்வதாயின் வேலிக் கதவைப் பூட்டி விட்டுச் சென்று விடுவார்கள். இதனால் பிள்ளைகள் பல நாள்கள் உவர் நீரைக் குடிக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.




பதினைந்து வருடங்களுக்கு மேலாக அருகில் உள்ள கடற்படையின் பௌசர்கள் மூலமாகத் தண்ணீர் பெறுகின்றோம்.

தற்காலிகமாகக் குடிதண்ணீரைப் பிரதேச செயலகம் வழங்குகிறது. அவர்கள் சிறிய தாங்கிகளில் நிரப்பும் தண்ணீர் இரண்டு நாள்களில் தீர்ந்து விடுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச சபைத் தலைவர், உப தலைவர்களிடமும் பல தடவைகள் கூறியும் எந்த முடிவும் இல்லை. எனவே தமக்கு நிரந்தரமாகக் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தித் தாருங்கள் என்று அச்சங்குளம் புனித சூசையப்பர் மீனவர் சங்கத்தினர் கோரியுள்ளனர். (த-213)

# உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியுடன் இனிமேல் கேபிள் கம்பங்கள் நடுகின்றோம்

## உள்ளூராட்சி சபையிடம் சரணடைந்து வழக்கை முடிவுறுத்தியது தனியார் நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடக்கில் உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் நடும் கேபிள்கம்பங்களுக்கு வீதியின் ஆளுகைத் திணைக்களத்துடன் மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியையும்பெற்றுக்கொள்ள கிறைமாஸ் நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றில் இணக்கம் தெரிவித்துள்ளது.

அதனால் அந்த நிறுவனம் தாக்கல் செய்த வழக்கு முடிவு றுத்தப்பட்டது.

குறித்த நிறுவனம் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் மாநகர சபையின் அனுமதியின்றி கேபிள்கம்பங்கள்நட்டிருந்தபோது மாநகர சபையினர் அவற்றை அகற்றியிருந்தனர்.

அவ்வாறு அகற்றப்பட்ட போது தமது கேபிள்கம்பங்களுக்குச் சேதம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி அந்த நிறுவனம் யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

அதேநேரம், "உள்ளூராட்சி சபைகளின் எல்லைப் பகுதிகளானாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைகளின் ஆளுகை வீதியோரம் வீதி அதிகார சபையின் அனுமதியுடன் மின் கம்பம் நட முடியும் என்றும் அவற்றை உள்ளூராட்சி மன்றங்கள் தடை போட முடியாது" என்றும் உத்தரவிடக்கோரி கிளைமாஸ் நிறுவனத்தினர் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் அரசதலைவர் சட்டத்தரணி அலிசப்ரி ஊடாக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபைசார்பில் அரசதலைவர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்தி ரன் முன்னிலையாகி, "உள்ளூராட்சி அதிகார சபைகளின் அனுமதி பெறாது, வீதி அபிவிருத்தி அதிகார சபைகளின் அனுமதி போதுமானது என்பதனை ஏற்க முடியாது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது வீதியோரம் நடுவதற்கான பரிந்துரையை அல்லது அனுமதியை வழங்க முடியும். ஆனால் அதன் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களினுடையது. ஆகவே உள்ளூராட்சி சபையிடம் அனுமதிபெற்றேஆகவேண்டும். இதேநேரம் குறித்த ஒளிபரப்பு நிறுவனம் தற்போது அனுமதி பெற்றிருப்பினும் கம்பங்களைநடும்போதும் குறித்த வழக்கைத்தாக்கல் செய்யும்போதும் ஒளிபரப்பு அனுமதியும் கிடையாது" என்ற வாதத்தை முன்வைத்தார்.

இவற்றைப் பரிசீலித்த நீதியரசர்களான யசந்த கோதாகொட மற்றும் அர்ச்சுனா ஒபயசேகர ஆகியோர், மேலதிக விளக்கங்களுடன் முறைப்பாட்டு சட்டத்தரணியை வினவினர்.

அதன்போது, உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் நடும் கேபிள் கம்பங்களுக்கு குறித்த வீதியின் ஆளுகைத் திணைக்களத்துடன் மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியையும் பெற்றுக்கொள்கின்றோம்" என்று கிளைமாஸ் நிறுவனத்தினர் மேல்முறையீட்டு நீதிமன்றில் இணக்கம் தெரிவித்தனர். அவர்கள் சார்பில் அவர்களின் சட்டத்தரணி இதனை மன்றில் முன்வைத்தார்.

இதே போன்றதொருவழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலும் இடம்பெற்று வருகிறது. அந்த வழக்கையும் மீளப்பெற நிறுவனத்தினர் இணக்கம் தெரிவித்தனர். அவற்றைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் கடந்த 10ஆம் திகதி வழக்கு முடிவுறுத்தி னர். (த-105)

## மின் தடை அறிவித்தல்

கொழும்பு, ஜூலை 13

வவுனியாவில் இன்று காலை 7 மணி தொடக்கம் 5 மணிவரை மின்தடை ஏற்படும் என பிரதம பொறியியலாளர் திருமதி மைதிலி தயாபரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா உப மின் நிலையத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசர திருத்த வேலை காரணமாக நாளை காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தின் பல இடங்களில் மின் தடைப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ)

# கேதீச்சர அலங்கார வளைவு தடைக்கு எதிராகப் போராட்டம்

வவுனியா, ஜூலை 13

மன்னார் திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவை மீண்டும் கட்டுவதற்குப் பிரதேச சபை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தமையைக் கண்டித்து வவுனியா கந்தசுவாமி கோவில் முன்பாக நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடத்தப்பட்டது.

"ஆயரே பிரதேச சபையை ஆட்சிசெய்யாதே ஆள்களை வெருட்டாதே!, மன்னார் ஆயரே புராதன பாரம்பரியத்தைச் சிதைக்காதே, அனுமதித்ததை நடைமுறைப்படுத்து, எம்மவரைப் பங்கு போடாதே வீடு வீடாகத் திரியாதே, திருக்கேதீச்சரம் புராதன ஆலயம் அதில் கைவைக்காதே, அன்புசெய்வதுபோல் ஆணவம் செய்யாதே, திருக்கேதீச்சர வளைவை மறைக்காதே, ஈழம் எங்கள் சிவபூமி, மனிதத்தைப்போதிக்கவேண்டிய மதங்கள் மனுநீதி இழக்கலாமா? மன்னார் சிவபூமி திருக்கேதீச்சரம் அதில் கைவைக்காதே" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

அவர்கள் கோவில் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் பேரணியாக மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்து அமைச்சர் மனோ கணேசனிடம் ஒப்படைப்பதற்கான மனு ஒன்றை மாவட்டச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலரிடம் கையளித்திருந்தனர்.

இந்தக் கண்டனப் பேரணியை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இந்து ஆலயங்களின் ஒன்றியம்,வெங்கலசெட்டிகுளம் இந்து ஆலயங்களின் ஒன்றியம், வவுனியா வடக்கு இந்து ஆலயங்களின் ஒன்றியம் என்பன இணைந்து ஏற்பாடுசெய்திருந்தன.

**முதலில் வந்தது சிவபூமியா மறைமாவட்டமா?**

குறித்த ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் கலந்துகொண்டிருந்தவர்களில் வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் துஸ்யந்தன் தெரிவித்ததாவது:

முதலில் வந்தது சிவுபூமியா, மறைமாவட்டமா? வரலாற்றைச் சரியாகப் படியுங்கள்.

**கடுமையான மதவாதம்!**

தமிழர்களினதும், சிவபூமியினதும் வரலாறு தெரியாத மன்னார் மாவட்டத்தின் ஒருசிலர் அங்கு தேவாலயத்தை அடாத்தாக அமைத்துவிட்டு திருக்கேதீச்சர ஆலய வளைவை அமைக்கவிடாமல் கடுமையான மதவாதத்தை மன்னாரில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சிவபூமி எப்போது வந்தது? மறைமாவட்டம் எப்போது வந்தது?

ஒரு முறை ஆயர் கூறியிருந்தார், "சிவபூமி என்பதை ஏற்கமுடியாது" என்று. அப்படியானால் மறைமாவட்டத்தை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது?.

எனவே தொடர்ச்சியாக இந்துக்களை துன்புறுத்தி ஒடுக்கி வரும் மன்னார் கத்தோலிக்க மதவாதிகளால் வளைவு அமைப்பதற்கு இனியும் தடை ஏற்படுத்தபட்டால் வவுனியாவில் அமைந்துள்ள கல்வாரி மலையில் யாத்திரை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஒட்டுமொத்த இந்துக்களும் எதிர்ப்பை வெளியிடுவோம். உங்களோடு இனிமேல் சமரசத்துக்கோ சமாதானத்துக்கோ வருவதற்கு எமது மனம் இடம்கொடுக்காது!

**ஸஹ்ரான் போன்றே நீங்களும் உள்ளீர்கள்!**

தமிழர்கள் என்று கூறிக்கொண்டு ஸஹ்ரான் போன்றவர்களைத் தீவிரவாதிகள் என்று எப்படி நீங்கள் கூறமுடியும்? நீங்களும் அந்த நிலையில் தான் இருக்கிறீர்கள்.

சைவத்தையும் தமிழரின் வரலாற்றையும் முதலில் படியுங்கள். இது தொடர்பாக ஆயருடன் விவாதம் செய்ய நான் எதிர்பாத்திருக்கிறேன் என்றார்.

**பின்னணி**

கடந்த சிவராத்திரிக்கு முதல் நாள் அலங்காரவளைவு உடைக் கப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னர் மன்னாரில் நடந்த சமய நல்லிணக்க நிகழ்வு ஒன்றில், நல்லிணக்கத்துக்குத் தமது தரப்பினர் காரணமாக இருந்திருந்தால் மன்னிப்புக் கோருகிறேன் என்று மன்னார் ஆயர் கூறியிருந்தார்.

எனினும், மன்னார் திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவு அமைப்பற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று மன்னார் ஆயரே கூறியிருந்தார் என்று மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் பின்னர் தெரிவித்திருந்தார். அதனால் வளைவு அமைக்க வழங்கிய அனுமதி மீளப் பெறப்பட்டது. இந்த நிலையில் நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. (த-110)



# போதைப்பொருள் கடத்தல்கள் சிறையில் இருந்து நடக்கின்றது

அமைச்சர் சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 13

சிறைகளில் இருந்தே போதைப்பொருள் கடத்தல்கள் வழிநடத்தப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ.

கெக்கிராவையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்திப் போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுகின்றது. உண்மையில் சாட்சியங்களுடன் இவை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்குவதில் எவ்வித தவறும் இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

தூக்குத் தண்டனைக்கு எதிராகப் பேசுவோரிடம் நான் ஒரு விடயத்தைக் கேட்கின்றேன்.

போதைப்பொருள் கடத்தல் காரணமாக நாட்டில் பாதிக்கப்படும் 45 இலட்சம் பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்காக என்ன செய்ய போகின்றீர்கள்? அதனால் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பாக நாம் தீர்மானம் எடுக்கவேண்டும்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பாகச் சிந்திக்கவேண்டாம். தயவு செய்து 45 இலட்சம் பாடசாலை மாணவர்கள் குறித்து சிந்தியுங்கள்- என்றார். (எ)



## வவுனியா பெண் உறுப்பினர்கள் மஸ்கெலியா அமர்வை பார்த்தனர்

வவுனியா, ஜூலை 13

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மஸ்கெலியா பிரதேச சபையில் நேற்று நடந்த அமர்வைப் பார்வையிட்டனர். 'சுத்தமான நகரம் பசுமையான நகரம்' செயற்றிட்டத்தையும் அவர்கள் அவதானித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

'டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் சிறிலங்கா' அமைப்பு அவர்களை அழைத்துச் சென்றிருந்தது.

மஸ்கெலியா பிரதேச சபைத் தவிசாளர் திருமதி செண்பகவல்லி தலைமையில் சபை அமர்வு நடைபெற்றது.

அங்குள்ள நடைமுறைகளைப் பார்வையிட்ட வவுனியா உறுப்பினர்கள் பிரதேச சபை வளாகத்தில் மரநடுகையில் கலந்துகொண்டனர்.

அவர்கள் மஸ்கெலியா நகர கழிவகற்றல் செயற்றிட்டத்தையும் பார்வையிட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## மதுபோதையில் சாரத்தியம்; 243 பேர் பொலிஸால் கைது!

கொழும்பு, ஜூலை 13

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 243 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை முதல் நேற்றுக் காலை 6 மணி வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்வதற்காக நாடளாவிய ரீதியில் கடந்த 5ஆம் திகதி சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்று முதல் இன்று காலை 6 மணி வரை மது போதையில் வாகனம் செலுத்திய 2 ஆயிரத்து 280 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை இந்த மாதம் முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ)

## முதுமாணிப் பட்டம் பெற்ற தூக்குத் தண்டனை கைதி

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் முதல் முறையாகத் தூக்குத் தண்டனை கைதியொருவர் முதுமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார். இந்திக்க ஏக்கநாயக்க என்ற கைதியே குறித்த முதுமாணிப் பட்டத்தை நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் பன்னாட்டு ரீதியில் 5ஆம் இடத்தை பெற்றிருப்பதுடன், இலங்கையில் முதல் தடவையாக முதுமாணிப் பட்டத்தை பெற்ற கைதியென்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இதனால் தூக்குத் தண்டனைக் கைதியாக இருந்த அவரை ஆயுள் தண்டனைக் கைதியாக தற்போது மாற்றப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை தனது முயற்சிக்கு தனது மனைவியே முழுமையான ஆதரவை வழங்கினார் என்று இந்திக்க ஏக்கநாயக்க கூறியுள்ளார். (எ)



## சிவத்தமிழ்செல்வியின் குருபூசை தின நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜூலை 13

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 11ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வுகள் நேற்று தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்றன.

நிகழ்வுகள் காலை 9 மணிக்குச் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் ஆரம்பமாகின.

நிகழ்வில் வாழ்த்துரையை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் வை.மனோமோகன், சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாஆகியோர் நிகழ்த்தினர்.

மூத்த சிவாச்சாரிகளான சிவசிறி மகேஸ்வரக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள், சிவசிறி சிவசாமிஐயர் குமார ராஜ குருக்கள்,பிரமசிறி முத்துசாமிஐயா பாலகுருசாமி சர்மா, சிவசிறி கிருஸ்ணசாமிக்குருக்கள் சதாசிவக்குருக்கள் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை, துர்க்காதேவி ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று, சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. (எ-21,26)

## வரவேற்பு நிகழ்வும் பிரிவுபசாரமும்

அளவெட்டி,ஜூலை 13

யாழ்ப்பாணம் மாசியப்பிட்டி சண்டிலிப்பாய் ஜே/144 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி மற்றும் பொருளாதார அலுவலகர்களாகக் கடமையாற்றியவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வும் அந்த இடங்களுக்குப் புதிதாக கடமையாற்றவுள்ளவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றன.

முதியோர் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் எட்வின் குணரட்ணம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றன.

நிகழ்வில் வலி.தென்மேற்குப் பிரதேசபை உறுப்பினர் எஸ்.அனுசன் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (ஜ-63)





# தரம் குறைந்த மருந்துகளே மக்களுக்கு கிடைக்கின்றன

ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் தற்போது மக்கள் தரம் குறைந்த மருந்துகளையே பயன்படுத்துகின்றனர். கடந்த காலங்களில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளில் அதிகமானவை தரம் குறைந்தவையும் காலாவதியானவையுமாக கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மக்களின் சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல விடயங்களைச் சுகாதார அமைச்சு மேற்கொள்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளிப்படுத்தியுள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று தெரிவித்து எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை தீர்மானத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பத்து கோடி பெறுமதியான காலாவதியான மருந்துகளை கொண்டுவரும் அரசு ஐந்து கோடி ரூபா செலவில் மருந்துவப் பரிசோதனை மையம் ஒன்றை உருவாக்க முடியாதா? மருந்துகளின் தரம், காலாவதி திகதிகளை ஆராய ஒரு நிலையத்தை உருவாக்க முடியாதா? ஏன் மருந்து நிறுவனங்களின் நலன்களுக்காக மக்களை கொல்கின்றீர்கள். இலங்கையில் உள்ள மருத்துவமனைகளைச் சுற்றியுள்ள மருந்தகங்களில் எத்தனை மருந்தகங்கள் அனுமதிப்பத்திரம் உள்ளது என்றதை தேடிப் பாருங்கள். தற்போது அரச மருந்தகங்களில் அதிகமானவை அனுமதிப்பத்திரம் இல்லாதவையாகும்.



சுகாதார அமைச்சரின் மாவட்டத்தில் உள்ள 15 அரச மருந்தகங்களில் 12 மருந்தகங்கள் அனுமதிப்பத்திரம் இல்லாதவை. இது அமைச்சருக்குத் தெரியுமா? இன்று இலங்கையில் மருந்து 'மாபியா' பரவியுள்ளது. மருந்து நிறுவனங்களின் நலன்களை மாத்திரம் கருத்தில் கொண்டு பாரிய மருத்துவ 'மாபியா'வையே நடத்தி வருகின்றனர்- என்றார். (எ)



## கல்வியியலாளர்கள் குழு வடக்குக்கு வருகை

கொடிகாமம், ஜூலை 13

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 17 கல்வி வலயங்களையும் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட கல்வியியலாளர்கள் குழு வடக்குக்கு வருகை தந்தனர்.

இந்த வருகையின்போது தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வரணி சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு நேரில் பயணம் செய்து அங்குள்ள சிறப்புக்களை ஆராய்ந்தனர்.

நேற்றையதினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கும் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். (ஜ-159)

# ரத்ன தேரரின் பேச்சை கேட்க தமிழர்கள் முட்டாள்களில்லை

## ரிசாத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ரத்ன தேரர் தமிழ் மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக திருப்ப முயற்சிக்கின்றார். தமிழ் மக்கள் அவரின் பேச்சைக் கேட்க முட்டாள்கள் அல்ல.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியால் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது நேற்றுமுன்தினம்இரண்டாம்நாள்விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் இந்த சபையில் இனவாதத்தை கக்கி வருகின்றார். கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ் மக்களைத் திசை திருப்ப முயற்சிக்கின்றார். ஆனால் தமிழ் மக்கள் இவரின் பேச்சைக் கேட்க முட்டாள்கள் அல்லர். எமக்கிடையே இருக்கும் பிரச்சினையை பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

மருத்துவர் ஷாபி மீது முன்வைத்த குற்றச்சாட்டு பொய் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் நீதிமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்து அவர் எதிர்பார்க்கும் தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என எதிர்பார்க்கின்றார். இது அவரின் மடமைத்தனமாகும். இதுபோன்ற பல இனவாதக் கருத்துக்களை தனது அரசியலுக்காக அவர் தெரிவித்து வருகின்றார் - என்றார். (எ)

# நாணய விதிச் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியாது

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13

அரசியல் நோக்கங்களுக்காக நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது. தேவைக்கேற்ப கொண்டு வருவதாயின் பொருளாதார நிபுணர்களின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். பொருளாதார ரீதியில் நாடு நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ள நிலையில் இவ்வாறான சட்டதிருத்தங்கள் நிலமையினை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் குழு அறை 7 இல் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1949 ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து திறைசேரியின் செயலரை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் ஊடாக மத்திய வங்கி தொடர்பில் திறைசேரிக்கு இருக்கும் கட்டுப்பாடு இல்லாமல்போவதுடன் , சுயாதீனமாக நாண யத்தை மத்திய வங்கி அச்சிடுவதற்கான சூழல் ஏற்பட்டுவிடும். அது மாத்திரமன்றி திறைசேரியின் செயலர், ஜனாதிபதியினாலேயே மத்திய வங்கியின் நாணய சபைக்கு நியமிக்கப்படுகிறார். திருத்தத்தின் ஊடாக அதனை ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஏற்கனவே நாடு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும். நாணய நிதிச்சட்டத்தில் அரசியல் தேவைகளுக்காக திருத்தங்களை மேற்கொண்டால் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மேலும் தீவிரமடையும். என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது

நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரச தலைவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்தில், பொருளாதார நிபுணர்கள் மற்றும் கல்விமான்கள் அடங்கிய குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி இந்தச் சட்டத்திருத்தம் நிதி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது. நாட்டின் நிதி நிலமையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இந்தத் திருத்தம் சரியான முறையில் மீண்டும் சரி செய்யப்படாவிட்டால் குழு நிலையில் அதனை எதிர்க்க வேண்டி ஏற்படும்.

மத்திய வங்கி நாட்டின் நாணய விடயத்தையும், திறைசேரி நிதி விடயத்தையும் கையாளுகின்றன. இருந்தபோதும் மத்திய வங்கிக்கும், திறைசேரிக்கும் இடையில் உள்ளகத் தொடர்புகள் இருக்கின்றன. இதன் அடிப்படையிலேயே திறைசேரியின் செயலர் மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவார். நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்து இதனை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றார்கள். இதனால் மத்திய வங்கி மீது நிதியமைச்சு கொண்டிருக்கும் கட்டுப்பாடு கைவிடப்படும். இதனால் மத்திய வங்கி சுயாதீனமாகச் செயற்படுவதற்கான சூழல் ஏற்படும்.

அது மாத்திரமன்றி, மத்திய வங்கி ஏனைய வர்த்தக வங்கிகளைப் போன்று அரசிடமிருந்தே வட்டியைப் பெற்று செயற்படக்கூடிய சூழல் ஏற்படலாம். இது நாட்டில் 2015ஆம் ஆண்டு மத்திய வங்கியின் பிணை முறி மோசடிகளை போன்று அரச ஆதரவுடன் மோசடிகள் இடம் பெறுவதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் - என்றார். (எ)

# மைத்திரிக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவருக

## வலியுறுத்துகிறார் ஹிருணிகா

கொழும்பு, ஜூலை 13

அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டு வரப்பட்டுள்ளநம்பிக்கையில்லாத் தீர்மானம் வரவேற்கத்தக்க தோர் விடயமாகும். ஆனால் அரசுக்கும், தலைமை அமைச்சருக்கும் எதிராக மாத்திரம்இதனைக்கொண்டு வரக்கூடாது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டியது அவசியமாகும்.

அரச தலைவருக்கு எதிராகவும் தீர்மானம் தயாரிக்கப்படுமாயின் அதற்காக 75 பேரின் கையொப்பங்களை திரட்டித் தருவதற்கு தயாராகவுள்ளேன்.

அதேவேளை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் வேட்பாளராக தன்னை நிறுத்துவார் என்று அரச தலைவர் கூறினார் என அண்மையில் கேள்விப்பட்டேன். அவ்வாறு அவரை நிறுத்தினால் பொதுஜன பெரமுன பெரும் பின்னடைவை நிச்சயம் சந்திக்கும். - என்றார். (எ)

# அரச தலைவருக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவரத் தயார்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

அரசுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவருவதென்றால் நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு தரப்பு உறுப்பினர்களின் கையொப்பம் வேண்டும். எம்மிடம் ஆறு பேர் உள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியின் 75 உறுப்பினர்கள் அரச தலைவருக்கு எதிராக கையொப்பமிட்டுகொடுத்தால்அரசதலைவருக்கு எதிராக நாம் தீர்மானம் கொண்டுவரத் தயார்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நாடா ளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தலைமை அமைச்சர், அரசு மற்றும் அமைச்சர வைக்கு எதிராக மக்கள் விடு தலை முன்னணி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான இரண்டாம்நாள்விவாதத்தில்உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப்பினர் சமிந்த விஜயசிறி " மக்கள் விடுதலை முன்னணி நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்துள்ளது ஆனால் இந்த தாக்குதலில் பிரதான குற்றவாளியாக அல்லது பொறுப்பை உணராது செயற்பட்டஅரச தலைவருக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றை கொண்டு வராது தலைமை அமைச்சருக்கு எதிராக கொண்டுவந்துள்ளது - என்றார்.

அப்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்ததாவது

இந்த தாக்குதலில் பொறுப்பின்மையாக செயற்பட்டவர் அரச தலைவர் என எமக்கும் தெரியும். ஆனால் அரச தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாது. அவருக்கு எதிராக குற்றத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும். குற்றத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்றால் நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு உறுப்பினர்களின் கையொப்பம் வேண்டும். அதாவது 75 உறுப்பினர்கள் கையொப்பமிட வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியாக நாம் 6 உறுப்பினர்கள் மட்டுமே சபையில் உள்ளோம். ஆகவே அரசதலைவருக்கு எதிராக குற்றத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர ஐக்கிய தேசிய கட்சியின் 75 உறுப்பினர்களின்கையொப்பத்தை நீங்கள் பெற்றுக்கொடுத்தால் நாம் குற்றத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும் - என்றார்.

இதற்குப் பதில் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, உங்களின் 6 பேருடன் என்னையும் இணைந்துக்கொள்ளுங்கள். இப்போது 7 பேர் உள்ளோம். அப்படியென்றால் இன்னும் 68 உறுப்பினர்களின் கையொப்பம் தேவைப்படுகின்றது - என்று கூறிச் சிரித்தார். (எ)

# வாய்ப்புற்று நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகின்றது என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாய்ப் புற்றுநோய் தொடர்பில் நாளாந்தம் நால்வர் உயிரிழக்கின்றனர் என்று பேராதனை பல்கலைக் கழகத்தின் வாய்வழி நோய்கள் தொடர்பிலான மூத்த பேராசிரியர் டபிள்யூ.எம்.திலகரட்ண தெரிவித்தார். ஆண்களே வாய் புற்றுநோயால் அதிகம் பீடிக்கப்படுகின்றனர். பாக்கு மற்றும் புகையிலை பாவனை வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான அதிக சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. குறிப்பாக இவற்றைக்கொண்டு தயாரிக்கப்படும் வெளிநாட்டு உற்பத்திகளுக்கு இளைஞர்கள் அடிமையாகியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.வாய்ப் புற்றுநோயை இலகுவில் அடையாளம் காண முடியும் என்பதால் துரிதமாக குணப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, வாய்ப் புற்றுநோய் தொடர்பிலான ஆராய்ச்சி கலந்துரையாடல் பன்னாட்டு மாநாடு இன்று முதல் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# மதத்தை முன்னிருத்தாது நீதியை வழங்க வேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

மருத்துவர் ஷாபியை முஸ்லிம் என்று பார்க்காமல் நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். மருத்துவ சேவையை அரசியல் கோணத்தில் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மக்களின் சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல விடயங்களை சுகாதார அமைச்சு மேற்கொள்வதாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளிப்படுத்தியுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்று தெரிவித்து எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைத் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# பூஜித், ஹேமசிறிக்கு எதிராக இதுவரை 12 மனுக்கள் தாக்கல்

## 25ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க நீதியரசர்கள் குழாம் முடிவு

கொழும்பு, ஜூலை 13

ஏப்ரல் 21 தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் வழக்கு தொடர வேண்டும் என்று கோரி 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்களை எதிர்வரும் 25 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான 7 பேர் கொண்ட நீதியரசர்கள் குழாம் நேற்றுத் தீர்மானித்தது.

இந்த மனுக்கள் தொடர்பில் ஆட்சேபனை காணப்படுமாயின் எதிர்வரும் 18 ஆம் திகதி மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், ஆட்சேபனைக்கு எதிரான மனுக்களை எதிர்வரும் 23 ஆம் திகதி தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதியரசர் குழாம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தர விட்டுள்ளது.

இதேவேளை, முதலாவது மற்றும் இரண்டாவது மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பூஜித் ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்னாண்டோ சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் முன்னிலையாகப் போவதில்லையென சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா மன்றில் தெரிவித்துள்ளார். (எ)

# ரிசாத்தை விசாரிக்காவிட்டால் நீதிமன்றத்தை நாட முடிவாம்

## எஸ்.பி. திசாநாயக்க கூறுகிறார்.



கொழும்பு, ஜூலை 13

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்டுள்ள பாராதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசாநாயக்க.

நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கேந்திர நிலையத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சகல ஆதாரமும் எங்களிடம் உள்ளது. அந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட பொலிஸ் மா அதிபர், குற்றப்புல னாய்வு பிரிவினர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்டோருக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தகுந்த விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படா விட்டால் உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யவுள்ளோம்.

ரிசாத் பதியுதீனுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக் கள் முன்வைக்கப்படுகின்றன. உரிய விசாரணை இல்லையேல் ஆதாரங்களுடன் நீதிமன்றம் செல்வோம் - என்றார். (எ)

# ஊழலை ஒழிப்பேன் என்றவர் எவற்றையுமே செய்யவில்லை

## மைத்திரியை சாடுகிறார் மகிந்தானந்த



கொழும்பு, ஜூலை 13

ஊழல் மோசடிகளை ஒழிப்பேன் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மத்திய வங்கி ஊழலைத் தடுக்க தவறியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு, விஜயராமயில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழலை ஒழிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசு, நான்கு வருடங்கள் கடந்தும் அவை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக இந்த அரசும் தமது ஊழலை மறைப்பதற்கு ஏனையோர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றது.

மத்திய வங்கியின் பிணை முறியின் முக்கிய சூத்திர தாரியான தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க உட்பட 10 பேர் தொடர்பாக அரச தலைவர் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்கினோம். ஆனால் அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படா விட்டாலும் மக்களுக்கு இந்த விடயம் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியது அவசியம். அதனால் யாரும் எதிர்ப்பார்க்காத முக்கிய அமைச்சர் ஒருவரின் மோசடி குறித்து விரைவில் அறிவிப்போம் - என்றார். (எ)

# பெருந்திருவிழா

கொடிகாமம், ஜூலை 13

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோயில்கள் ஸ்ரீபருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் இடம் பெறும்.

தொடர்ந்து 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 29 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

# இந்திய மீனவர்கள் 6 பேர் கடற்படையினரால் கைது

கொழும்பு, ஜூலை 13

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். அவர்களின் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினரால் பன்னாட்டுக் கடல் எல்லையில் இருந்து 3 கடல் மைல் தொலைவில் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 62, 48, 39, 27, 22 மற்றும் 12 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மருத்துவ பரிசோதனையின் பின்னர் யாழ். கடற்றொழில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுவர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ)

# பயங்கரவாதத்தை அழிக்க அரசுக்கு ஒத்துழையுங்கள்

## அழைக்கின்றார் சம்பிக்க



கொழும்பு, ஜூலை 13

நாட்டில் தற்போது அச்சுறுத்தலாக காணப்படும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அரசுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும். அதை விடுத்து அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதில் அர்த்தமில்லை.

இவ்வாறு அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம் பெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தாக்குதல் மற்றும் அதன் பின்னரான செயற்பாடுகளில் அரசு சரியாக செயற்படவில்லை என்பதே மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் சாராம்சம்.

இந்த தாக்குதல் சம்பவம் அரசின் பலவீனத்தை காட்டுகின்றது உண்மையில் இந்த தவறுக்கு நாம் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். ஆனால் இதற்கு தீர்வு அரசை வீழ்த்துவதா? அல்லது அனைத்து கட்சிகளும் இணைந்து இந்த பயங்கரவாதத்தை இல்லாது ஒழிப்பதா? என்பதை சிந்திக்க வேண்டும்.

நாட்டில் தலைதூக்கியுள்ள புதிய பயங்கரவாதம் மேலும் பலமடைந்துள்ளது. அதை வெற்றிகொள்ள மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொண்டு செயற்பட வேண்டும். அதில் தவறு என்ன என்பதை சிந்தித்து அதனை திருத்திக்கொள்ள வேண்டும். அரச தலைவர் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு படைகளுக்கு இடையில் தொடர்பின்மையே இதற்குக் காரணம்.

ஆனால் நாம் நாடு என்ற ரீதியில் வெற்றிகொள்ள வேண்டும். இதில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த்தேசியகூட்டமைப்பு, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என அனைத்து தரப்பினரும் இணைந்து ஒத்துழைப்பு தர வேண்டும்.- என்றார். (எ)

# செயல் அரசியல்வாதிகளின் பெயர்களை பொது இடங்களுக்குச் சூட்ட வேண்டாம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 13

பொது இடங்கள், பாதைகள், அரச கட்டடங்களுக்கு உயிரோடு இருக்கும் செயற்பாட்டு அரசியல்வாதிகளின் பெயர்கள் சூட்டுவது தவிர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மகிந்த தேசப்பிரிய சகல திணைக்களத் தலைவர்களுக்கும் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார்.

உயிரோடு இருக்கும் செயற்பாட்டு அரசியல்வாதிகளின் பெயர் சூட்டுதல் எனும் தலைப்பில் வெளியான கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்காலத்தில் பொதுச் சொத்துக்களுக்கு உயிரோடிருக்கும் செயற்பாட்டு அரசியல்வாதிகளினதும் மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பெயர் சூட்டும் சம்பவம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சுதந்திரமான, நீதியான தேர்தல்கள் நடைபெறமுடியாது என்று அறிவித்து வருகின்றனர்.

ஆகையால் இனிவரும் காலங்களில் உயிரோடு இருக்கும் செயற்பாட்டு அரசியல்வாதிகளினதும் நாடாளுமன்ற, மாகாண சபை அமைச்சர்களினதும் பெயர்களைச் சூட்டுவதைத் தவிர்க்குமாறு அதில் கோரப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சில வாரங்களுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் கட்சிகளின் தலைமைகளுடனான சந்திப்பில் எடுத்துக் கூறி ஆதரவு கோரியிருந்தார். எனினும் எந்தவொரு கட்சியினரும் இது விடயத்தில் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை- என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த-50)

# 5,65,173 பேர் வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 13

வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 65 ஆயிரத்து 173 ஆக அதிகரித்துள்ளது.

17 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 573 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 994 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப்கொடிப்பிலிதெரிவித்துள்ளார்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கலுக்காக வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# கூட்டமைப்பும், ஜே.வி.பியும் அமைச்சு பொறுப்புகளை ஏற்பதே சிறப்பானது

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 13

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசால் இதுவரையில் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லைஎன்று குறிப்பிடும் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியைப் பாதுகாத்து தமிழ்மக்களுக்கு துரோகமிழைக்கின்றது.

எதிர் தரப்பினராக இருந்து கொண்டு கூட்டமைப்பினரும், மக்கள்விடுதலைமுன்னணியினரும் அரசின் பங்காளியாக செயற்படுவதை விட அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வதே பொருத்தமானதாக அமையும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) தலைமை காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசு இதுவரையில் எவ்வித தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் கூட்டமைப்பினர் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியை பாதுகாப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளுக்குதீர்வுகாணும் நோக்கம் கூட்டமைப்பினரிடம் கிடையாது. எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த 4 வருடகாலமாக அரசின் அனைத்து வரப்பிரசாதங்களையும் இவர்கள் பெற்று தமிழ் மக்களுக்குத் துரோக மிழைத்துள்ளார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியினருக்குக் கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் தொடர்ந்து ஆதரவு வழங்குவது அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொள்வதால் பதவி நிலையின் பொறுப்புக்கள் அவமதிக்கப்படுகின்றன.

இந்த இரு தரப்பினரும் குறுகிய காலத்துக்கு அரசின் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டு முழுமையாக அரசுக்குச் சார்பாகவே செயற்படலாம். அதுவே சிறப்பாக அமையும். என்றார். (எ)

## ஆண்டு நிறைவு விழா

வவுனியா. ஜூலை 13

வவுனியா கலை இலக்கிய வட்டத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு தலைவர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# முற்போக்கான ஒரு நாடாக இலங்கையை மாற்றுவேன்

## சஜித் கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 13

நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மக்கள் என்னிடம் ஒப்படைத்தால் இலங்கையை முற்போக்கான நாடாக மாற்றுவேன் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரத்மலானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையை பிரகாசமான நாடாக மாற்றுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அதற்கு மக்கள்தான் எமக்கு உதவ வேண்டும். யார் தவறானவர்கள். சரியானவர்கள் என்பது குறித்து மக்களாகிய நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போது. இலங்கை நடுத்தரவருமானம்கொண்ட நாடாக மாறியதால் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கான உதவி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் தற்போது பின்னடைவை சந்தித்துள்ள நாட்டை முன்னேற்ற பாதையை நோக்கி கொண்டுச் செல்ல என்னால் முடியும் - என்றார். (எ)

# தூக்குக்கு எதிரான தீர்மானத்தை அரசிதழில் பிரசுரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 13

தூக்குத் தண்டனையை இல்லாதொழிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் தீர்மானத்தை அரசிதழில்பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் நிலைப்பாடு என்னவென கேட்கவும் தீர்மானிக்கப்ப ட்டுள்ளது.

எந்தவொரு சட்டத்தின் மூலமும் தூக்குத் தண்டனையை விதிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருப்பதை இல்லாதொழிக்கவேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொடவால் தனிநபர் தீர்மானம் நாடாளுமன்றத்தில் முன்முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தத் தீர்மானம் நேற்று நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் தீர்மானத்தை அரசவர்த்தமானியில் இன்றே இயலச் செய்வதற்காக 52 மற்றும் 53 ஆம் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் இடை நிறுத்தப்படுமெனவும்குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த தீர்மானம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு அவரது நிலைப்பாடு என்னவென கேட்கவும் அதன் பின்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து தீர்மானம் எடுக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

கொழும்பு. ஜூலை 13

நுவரெலியா பொகவந்தலாவ பகுதியில் சட்டவிரோதமான முறையில்மாணிக்கல் அகழ்வில் ஈடுபட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ. டின்சின் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்களே நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சுற்றுப்புற சூழலுக்கு தீங்கேற்படும் வகையில் மாணிக்கல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# மீண்டும் தீர்மானம் வந்தால் அரசை நிச்சயம் கவிழ்ப்போம்

## டிலான் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு. ஜூலை 13

தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஆதரவின் காரணமாகவே அரசுக்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது. கூட்டமைப்பின் ஆதரவு இல்லாவிட்டால் நிச்சயமாக அரசுக்கு வெற்றிப் பெற்றிருக்க முடியாது. மீண்டும் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுமாக இருந்தால் அதனூடாக ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசை நிச்சயமாக தோற்றகடிப்போம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்டிலான்பெரேராதெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 70 வீத வாக்குகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். அவ்வாறாயின் அவர் 65 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொள்ள கூடிய ஒருவராக இருக்க வேண்டும். கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போது கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் இந்த 65 வாக்குகளை எவ்வாறுபெற்றுக்கொள்வது என்பதை மிக இலகுவாக தீர்மானிக்க வேண்டும்.

இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலின் போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு மாத்திரம் 50 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஆகவே 50 வீதமான வாக்குகனை பொதுமக்கள் முன்னணியால் பெற்றுக்கொள்ள முடியும். இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் சுதந்திர கட்சியும் இணைந்து போட்டியிடுமாக இருந்தால் நிச்சயமாக தேர்தல் எங்களுக்கு சாதமாகவே அமையும்- என்றார். (எ)

# தொடருந்து விபத்தில் ஒருவர் சாவு மக்கள் போராட்டத்தால் பதற்றம்

கொழும்பு. ஜூலை 13

ஜா எல ஏக்கலப் பகுதியில் நேற்று நடந்த தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதையடுத்து மக்கள் போராட்டம் நடத்தியதால் அங்கு பதற்ற நிலமை ஏற்பட்டது.

ஜா எல ஏக்கலப் பகுதியின் துடெல்ல ரயில் நிலையத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தொடருந்தில் மோதியதிலேயே விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் துடெல்லப் பகுதியைச் சேர்ந்த 45 வயது மதிக்கத் தக்க ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையைகடக்கமுயற்சிக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த இடத்தில் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைக் காணப்படுவதாலேயே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் விபத்து இடம்பெற்ற பகுதியில் ஒன்றுகூடிய அந்தப் பகுதி மக்கள் தொடருந்தைப் போகவிடாது தடுத்துடன், அந்தப் பாதுகாப்பற்ற கடவைக்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரமாக தொடருந்தைத் தடுத்து வைத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையால் நாட்டின் பல பகுதிகளுக்குமான தொடருந்துச் சேவை முற்றாகப் பதிக்கப்பட்டன. அதையடுத்துப் பொலிஸாரும் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளும் குறித்த மக்களுடன் பேச்சில் ஈடுபட்டனர்.

அதேவேளை, அந்தப் பகுதியில் ஐந்து உயிரிழப்புக்கள் பாதுகாப்பான தொடருந்துக் கடவை இல்லாமையால் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (எ)



## தொடருந்துகள் மோதல் சாவுகள் அதிகரிப்பு

லாகூர், ஜூலை 13
தொடருந்து நிலையத்தில் தரித்து நின்ற தொடருந்துடன் எதிர்த்திசையில் வந்த பயணிகள் தொடருந்து மோதியதில் 11 பயணிகள் சாவடைந்தனர் என்று நேற்றையதினம் முதற் கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

பாகிஸ்தானின் கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சாதிக்கபாத் தேசில் பகுதியில் உள்ள வால்கர் தொடருந்து நிலையத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் சாவுகள் 20ஆக அதிகரித்திருப்பதாகப் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

பயணிகள் தெடாருந்து தடம் மாறிப் பயணித்துத் தரித்து நின்ற மற்றொரு தொடருந்துடன் மோதிய இந்த விபத்தில் பயணிகள் தொடருந்தின் இயந்திரப் பகுதியும் 3 பெட்டிகளும் நொருங்குண்டன.

சாவடைந்தவர்களைத் தவிர 60க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக் இராணுவத்தின் தாக்குதலில் ஐ.எஸ். ஆயுததாரிகள் 11பேர் சாவு

பக்தாத், ஜூலை 13
ஈராக்கில் அந்த நாட்டு இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 11 பேர் சாவடைந்ததாக அந்த நாட்டு இராணுவம் தெரிவித்தது. செய்தியாளர்களைச் சந்தித்த ஈராக்கின் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்தோடு 8 ஆயுததாரிகள் கைது செய்யப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்ட பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டதாகவும், அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் 54 வெடிமருந்துக் கிடங்குகள் அழிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். அமைப்பு முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக 2017ஆம் ஆண்டின் இறுதியில் அப்போதைய ஈராக்கின் தலைமை அமைச்சர் ஹைதர் அல்அபாடி அறிவித்தார். ஆனால், சமீப காலமாக அங்கு அந்த அமைப்பு மீண்டும் தலைதூக்கத் தொடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



16 குழந்தைகள் கொன்று குவிப்பு

# மனித உரிமைகளைத் தொடர்ந்து மீறி வருகிறது இஸ்ரேலியப் படை

ஜெருசலோம், ஜூலை 13
இஸ்ரேல் – பாலஸ்தீனப் போர் விடயத்தில் போர் தர்மங்களைப் புறமொதுக்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்ற இஸ்ரேல் இராணுவத்தால் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்பட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.




பாலஸ்தீனம் மீதான தாக்குதல்களில் 16 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டியே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தது பாலஸ்தீனத் தொண்டு நிறுவனம் ஒன்று. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: 2019 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் தற்போதுவரை 16 பாலஸ்தீனக் குழந்தைகளை இஸ்ரேல் கொன்றுள்ளதாகப் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

கடந்த ஆறுமாதத்தில் காசா பகுதியில் உள்ள பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள் மீது இஸ்ரேல் இராணுவம் 17 தடவைகள் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 16 குழந்தைகள் சாவடைந்துள்ளனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து மனித உரிமைகளை மீறுகின்றது என்றும் அது மேலும் தெரிவித்தது.

**பின்னனி**

ஜெருசலமை இஸ்ரேலின் தலைநகரமாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து பாலஸ்தீனம், இஸ்ரேல் இடையே மோதல் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு முதல் காசா எல்லையோரத்தில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் இஸ்ரேலை எதிர்த்துக்கடந்த சில மாதங்களாகவே பேரணியாகச் சென்று வருகின்றனர். இந்தப் பேரணியை நோக்கி இஸ்ரேல் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 100க்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்தனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக ஐ.நா. சபை முன்னெடுத்த விசாரணையை இஸ்ரேல் நிராகரித்தது. இந்த நிலையில் மீண்டும் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.



உக்ரைனின் செர்னோபில் அணுமின் நிலையத்தின் சேதமடைந்த ஒரு பகுதித் தொகுதி மீது பாதுகாப்பான புதிய மூடு கவசத்தை நிறுவும் திட்டத்தில் உக்ரைன் அதிபர் வோலோடிமைர் ஜெலென்ஸ்கி கலந்து கொண்டார். உலகின் மிகப் பெரும் துயரம் என்று வர்ணிக்கப்படுகின்ற செர்னோபில் அணு உலை விபத்து நடந்த பகுதியைப் பாதுகாப்பான பகுதியாக்கி அதைச் சுற்றுலாத்தலமாக்குகின்ற பெரு முயற்சியில் அவர் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

1 ட்ரில்லியன் தொன் எடையுடன்

## கடலில் மிதக்கும் உலகின் மிகப் பெரிய பனிப்பாறை

அந்தாட்டிக்கா பகுதியில் இருந்த ‘ஏ68’ என்று அழைக்கப்பட்ட பனிப்பாறையே உலகின் மிகப் பெரிய பனிப்பாறையாகும். இந்தப் பனிப்பாறை இரண்டு ஆண்டுகளுக்கு உடைந்து பிரிந்தது.

உலகின் மிகப்பெரியதான இந்தப் பனிப்பாறை அந்தாட்டிக்காவை அண்மித்துள்ள வெட்டெல் கடல் பகுதியில் தற்போது மிதப்பதாகச் செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின் றன.

160 கிலோ மீற்றர் நீளமும் கிட்டத்தட்ட ஒரு ட்ரில்லியன் தொன் எடையையும் கொண்டதான இந்தப் பனிப்பாறை சில காலமாகவே ஆழமற்ற கடல் பகுதியில் சிக்கிக் கொண்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், தற்போது இது நகர ஆரம்பித்துள்ளது.



தண்ணீர் தட்டுப்பாடு

## 25லட்சம் லீற்றர் தண்ணீருடன் தமிழகத்தை அடைந்து ரயில்

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் பெரும் தண்ணீர்த்தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில், தமிழகத்திலுள்ள சென்னையில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக வேலூர் மாவட்டத்திலுள்ள ஜோலார்பேட்டையில் இருந்து சென்னைக்கு 25இலட்சம் லீற்றர் நீரை ஏற்றிச் சென்றது தொடருந்து ஒன்று. காவிரி கூட்டுக் குடிதண்ணீரைத் தொடருந்து மூலம் சென்னைக்குக் கொண்டு செல்லும் இந்தத் திட்டத்துக்குத் தமிழக அரசு ரூ.65 கோடி(இந்திய மதிப்பில்) நிதியை ஒதுக்கீடு செய்தது. இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் ஜோலார்பேட்டையில் இருந்து புறப்பட்ட தொடருந்து மதியம் சுமார் 12 மணி அளவில் வில்லிவாக்கத்தைச் சென்றடைந்தது. வில்லிவாக்கம் தொடருந்து நிலையத்தில் இருந்து குழாய்கள் மூலமாகக் குடிநீர், கீழ்ப்பாக்கம் கொண்டு செல்லப்பட்டு அங்கேயுள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படும். சுத்திகரிப்புக்குப் பின், கீழ்ப்பாக்கத்தில் இருந்து குடிநீர் சென்னை மக்களுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது.

# திருமண நிகழ்வில் தற்கொலைத் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் சம்பவம் - 5 பேர் சாவு

காபுல்.ஜூலை13
ஆப்கானிஸ்தானில் திருமண நிகழ்வு ஒன்றில்நடந்ததற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 5 பேர் சாவடைந்தனர். 40க்கும்மேற்பட்டவர்கள்காயமடைந் தனர்.

ஆப்கானிஸ்தானில் கிழக்கே உள்ள நன்கர்ஹர் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது. குறித்த திருமண நிகழ்வில் குண்டுத்தாக்குதல்நடத்தியவர் இளைஞர் என்று கண்டறியப்பட்டது.

இதில் பாதிக்கப்பட்ட பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதனால்சாவுஎண்ணிக்கைஅதிகரிக் கலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஆயுத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் நன்கர் ஹர் பகுதியில் தாக்குதலையும் நடத்தி வருவதால் இந்தத் தாக்குதலை அவர் களே நடத்தி இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக் காலமாக ஆப்கானில் தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## ஈரான் கப்பலில் இருவர் கைது ஜிப்ரால்டர் பொலிஸார் அதிரடி

லண்டன். ஜூலை.13.
ஈரானுக்குச் சொந்தமான 'கிரேஸ் 1' என்ற கப்பலின் தலைவரையும், அதன் முதன்மை அதிகாரியையும் கைது செய்துள்ளதாக ஜிப்ரால்டர் பொலிஸார் தெரிவித்தனர். அத்தோடு கப்பலில் உள்ள சரக்குத் தொடர்பான ஆவணங்கள், மற்றும் சில பொருள்களையும் கைப்பற்றியதாக ஜிப்ரால்டர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பன்னாட்டு அணு ஆணுயுதப் பரவல் தடைச் சட்டத்தை மீறி ஈரானிலிருந்து எண்ணையைச் சிரியாவுக்குக் கொண்டு சென்றதாக கூறியே அந்தக் கப்பலைக் கைப்பற்றும்படி பிரித்தானியாவுக்கு வேண்டுகோள் விடுத்தது ஜிப்ரால்டர்.

அதனால் ஜிப்ரால்டர் கடற் பரப்பில் இந்தக் கப்பலை பிரித்தானியாவின் கடற்படை கைப்பற்றியது. அந்தக் கப்பலில் இருந்த சரக்குகளின் மாதிரியைப் பரிசோதித்த பிரித்தானியாவின் ஆராய்ச்சி மையம் அந்தக் கப்பலில் இருப்பது மசகு எண்ணை தான் என உறுதிப்படுத்தியது. அதன் அடிப்படையிலே ஜிப்ரால்டர் அரசு தனது நடவடிக்கைகளைத் தொடரலாம் எனப் பிரித்தானியா தெரிவித்தது. இந்த நிலையிலேயே அந்தக் கப்பலின் தலைவரையும் அதன் முதன்மை அதிகாரியையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளவதாக ஜிப்ரால்டர் பொலிஸார் தெரிவித்தனர்.



## காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவர் யார்?



புதுடெல்லி,ஜூலை 13
அண்மையில் நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைத் தழுவியதால் அந்தக் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் அவரைச் சமரசம் செய்தும் ராகுல்காந்தி தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. அத்தோடு தனது குடும்பத்தில் இருந்தும் யாரையும் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ள ராகுல்காந்தி புதிய தலைவர் தேரிவில் தலையிடமாட்டேன் என்றும் கூறியுள்ளார். இதனால் கடந்த 1 மாதமாகக் காங்கிரஸ் கட்சி தலைவர் இல்லாமல் உள்ளது.

இந்த நிலையில், மூத்த தலைவர்கள் மல்லிகார்ஜுனகார்கே, அசோக்கெலாட் உள்பட சிலரது பெயர்கள் காங்கிரஸின் தலைவர் பதவிக்குப் பரிசீலிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகின. தென் மாநிலத்தை சேர்ந்த ஒருவரைத் தலைவராக்கலாம் என்று ஆலோசனை நடப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் இதில் ஒருமித்த முடிவு ஏற்படவில்லை. இந்தநிலையில் தலைவர் பதவியை ஏற்கும்படி சோனியா காந்தியிடம் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியானபோது, கட்சித் தலைவர் பதவியை ஏற்பீர்களா என்று கேட்கப்பட்டதற்கு அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்று சோனியா காந்தி கூறியிருந்த நிலையிலேயே தற்போது அவரைப் பதவி ஏற்குமாறு கோரப்பட்டு வருகிறது.

ராஜிவ் கொலை விவகாரம்

# விடுதலை தொடர்பான பரிசீலனை ஆளுநரால் நிலுவையில் உள்ளது

### நீதிமன்றில் சுட்டிக்காட்டியது தமிழக அரசு

சென்னை, ஜூலை13
இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர்ராஜீவ்காந்திகொலைவழக்கில்தடுத்துவைக்கப்பட்டுள்ள7பேரின் விடுதலைதொடர்பானதமிழகஅமைச் சரவையின் பரிந்துரை, ஆளுநரின் பரிசீலனையில் நிலுவையில் இருப்பதைத் தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

ராஜீவ்காந்திகொலைவழக்கில்ஆயுள் கைதிகளாக உள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வது தொடர்பாகத் தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. கடந்தஎட்டுமாதங்களாக இந்தப் பரிந்துரை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அமைச்சரவை பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்க




ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என நளினி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப் பட்டது. இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்த போது, நளினி தரப்பு வழக்கறிஞர், அரசியல் சாசன அதிகாரம் கொண்ட ஆளுநர் அமைச்சரவையின்பரிந்துரைமீதுநடவடிக்கைஎடுக்க வேண்டும்

எனவும், எட்டுமாதங்களாகஎந்தநடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை எதிர்த்துத் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் ஆளுநருக்கு சட்ட பாதுகாப்பு இருந்தாலும் அமைச்சரவை பரிந்துரை மீது எந்த முடிவும் எடுக்காமல் இருக்க முடியாது எனவும் வாதிட்டார் தமிழக அரசு தரப்புத் தலைமை வழக்கறிஞர், ஆளுநருக்குநீதிமன்றம்உத்தரவிட முடியாது என்றும் அவருக்கு சட்டப் பாதுகாப்பு இருப்பதாகவும், 7பேர்விடுதலைவிவகாரத்தைப் பொறுத்தவரை அது ஆளுநரின் பரிசீலனையில் நிலுவையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இந்த வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கைத் திகதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தனர்.



## இன்றைய நாள்

**மேடம்:** பேச்சு, செயலில் வசீகரம் வெளிப்படும். தொழில் வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**இடபம்:** சவால்களை ஏற்று வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் சாதனை புரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** குடும்ப விஷயங்களை பிறரிடம் பேச வேண்டாம். விடாமுயற்சியால் தொழில் வியாபார நடைமுறை சீராகும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**கடகம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள்.

**கன்னி:** உங்களின் நற்குணத்தை சிலர் விமர்சிப்பர். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். முக்கியச் செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**துலாம்:** குடும்பத்தினர் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியை சரிசெய்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர். அன்புக்குரியவராக திகழ்வர்.

**விருச்சிகம்:** பேசும் வார்த்தை குளறுபடியாகலாம். செயல்களில் நிதானம் பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளை சரிசெய்வது நல்லது.

**தனுசு:** புத்திசாதுர்யத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை அடையும். நண்பரிடம் முன்னர் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும்.

**மகரம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**கும்பம்:** மனதில் அதிருப்தி ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமத்திற்கு ஆளாவர்.

**மீனம்:** கூடுதல் பொறுப்பால் சிரமத்திற்கு ஆளாவீர்கள். தொழில் வியாபாரத்தில் சராசரி அளவில் வருமானம் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

# போலி நாணயத்தாளுடன் மூன்று பேர் கைது

## கொடிகாமம் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

போலி நாணயத்தாளை வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தி மூன்று பேரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் மிருசுவில் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் இரண்டு ஐயாயிரம் ரூபா தாள்களைக் கொடுத்து பொருள்கள் வாங்கியுள்ளனர். 5 ஆயிரம் ரூபா தாள்கள் போலி என்று சந்தேகப்பட்ட வர்த்தகர் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். வர்த்தக நிலையத்துக்குச் சென்ற பொலிஸார் கெற்பேலியைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்தனர். (ஔ.5.159)

## கெட்டவர்களில்...

கூடியவர்கள் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாதே என்கிற பதற்றம்தான் எங்கள் முடிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடியது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**ஆதரிக்க முடியாது**

அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியின் மீது நம்பிக்கை உண்டா இல்லையா என்கிற விவாதத்துக்காகக் கூடியிருக்கின்றோம். இந்த நிலை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வேறு வேறானவை. எந்தவொரு சிங்கள, பௌத்த் ஆட்சியையும் தமிழர்களாகிய எங்களால் மானசீகமாக ஆதரிக்க முடியாது. பல்லின பலமத பலசமூக நாடாக இலங்கை ஆக்கப்படும்பொழுது ஆட்சியைப் பிடிக்கக்கூடிய நேர்மையான தரப்பை மட்டுமே தமிழர்களால் ஆதரிக்க முடியுமே தவிர, இன்று அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் கட்சியையும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முயற்சிக்கும் கட்சியையும் தமிழர்களால் ஒருபோதும் ஆதரிக்க முடியாது.

ஆனால், அரசியலில் தமிழர்களின் நிலை இன்று பரிதாபகரமானது. அவர்களுக்கு முன்னால் உள்ள தெரிவு யார் நல்லவர் யார் கெட்டவர் என்பதல்ல. இருக்கின்ற கெட்டவர்களில் யாரைத் தெரிந்தெடுப்பது என்பதுதான். இன்றைய ஆட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டுமா என்பதல்ல எம்முன் உள்ள கேள்வி, தமிழர்களுக்கு இதைவிட நரகத்தைத் தந்துவிடக்கூடியவர்கள் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாதே என்கிற பதற்றம்தான் எங்கள் முடிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடியது. தெரியாத தேவதையை விட தெரிந்த பேய்களே மேலானவை என்கிறது ஆங்கிலப் பழமொழி. தமிழர்களுக்கு முன்பாக உள்ளதோ தெரிந்த பேய்களும், நன்கு தெரிந்த பிணந்தின்னிப் பிசாசுகளும்தான். இதில் ஒன்றைத் தெரிந்தாகவேண்டும் என்பதுதான் தமிழர்களின் நிர்ப்பந்தம். எனவே களச் சூழல் தமிழர்களுக்கு நேர்மையான தெரிவுகள் எதனையும் விட்டுச் செல்லவில்லை.

**தமிழர்களை கழுத்தறுத்தார்கள்**

ஆனால், இன்றைய ஆட்சியையும்கூட தமிழர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஏன் ஆதரிக்க முடியாது என்பதை இங்கு விளக்க வேண்டியது இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியம் என்று நினைக்கின்றேன். 2015ஆம் ஆண்டு புதிய ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதில் தமிழர்களும் மிக முக்கிய பங்காற்றினார்கள் என்பதும் ஏன் அந்தப் பங்கையாற்றினார்கள் என்பதும் உலகறிந்த ரகசியம். ஆனால், இன்றைய அரச தலைவரும் தலைமை அமைச்சரும் தமிழர்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்தவர்கள். தீர்வைத் தருகின்றோம், புதிய அரசமைப்பைக் கொண்டு வருகின்றோம் என்று நம்ப வைத்து நம்ப வைத்தே ஏமாற்றியவர்கள். ஏமாற்றுகின்ற சிங்களத் தலைவர்களின் வாரிசுகளாக அவர்களும் நம்பி ஏமாறுகின்ற தமிழ்த் தலைவர்களின் வாரிசுகளாக நாங்களும் இருக்கின்றோம் என்பதே இந்த நாட்டின் துரதிர்ஷ;டம்.

எம்மை நம்பவைத்து ஏமாற்றியது மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையையும் பன்னாட்டுச் சமூகத்தையும்கூட நம்ப வைத்து ஏமாற்றியது இந்த ஆட்சி. தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நிலைமாறுகால நீதி இல்லாமலேயே அந்தக் காலம் கடந்து போய்க்கொண்டிருக்கின்றது. தமிழர்களின் படுகொலைகளுக்கு நீதி வழங்கப்படவேயில்லை. வடக்கு - கிழக்கில் பௌத்தமயமாக்கல் நிறுத்தப்படவில்லை. அரச வேலை வாய்ப்புக்களில் தமிழர்களைப் புறந்தள்ளி, சிங்களவர்களுக்கே வாய்ப்புக் கொடுக்கும் போக்கு நிறுத்தப்படவில்லை, வடக்கு கிழக்கில் தமிழர்களின் இனப்பரம்பலை சிதைக்கும் நோக்கோடு அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் இருக்கும் இடங்களைச் சிங்களமயமாக்குதல் தொடர்கின்றது.

**நிதானித்துச் சிந்தனை**

இப்படி தமிழர்கள் தனிநாடு கேட்டுப் போராடுவதற்கு என்னென்ன நியாயங்களை எல்லாம் 30 வருடங்களுக்கு முன்னர் வைத்தார்களோ அவையெல்லாம் இன்றும் நவீன வடிவத்தில் 30 வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிட வேகமாக நிகழ்ந்து வரும் நிலமைதான் தமிழர்களால் அதிகாரத்துக் கொண்டுவரப்பட்ட ஆட்சியின் சாதனை. அப்படிப்பட்ட ஒரு ஆட்சியைத் தமிழர்கள் ஏன் ஆதரிக்க வேண்டும்? கூடாதுதான். ஆனால், இவர்களை ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டால், அடுத்து வரப்போகின்ற ஆட்சி தமிழர்களை மீண்டும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கி சுத்தமாகத் துடைத்தழித்துவிடுவார்களோ என்கிற அச்சம் ஏற்படுகிறதல்லவா? அதுதான் நிதானித்துச் சிந்திக்க வைக்கின்றது.

இன்று இந்த ஆட்சி தொடர்வதற்காக நாம் ஆதரவளிக்கும் ஒரு நிலை ஏற்பட்டால்கூட அது இந்த ஆட்சியின் மீதான நம்பிக்கையால் அல்ல, நாம் அழித்தொழிக்கப்பட்டுவிடக்கூடாதே என்கிற அச்சத்தால் ஏற்படுகின்ற முடிவு என்பதை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்தவொரு சிங்கள, பௌத்த ஆட்சியின் மீதும் தமிழர்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பதுதான் எமது அறுதியும் இறுதியுமான முடிவு.

**முஸ்லிம்கள் மீதான வன்முறை**

கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்தெழுகை நாளன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக எமது நாடு ஒரு பேரழிவுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக உயிர்ப்பலிகள், படுகொலைகள், சொத்திழப்புகள் எனப் பல நெருக்கடிகள் ஏற்பட்டமை மட்டுமன்றி எமது பொருளாதாரத்தின் பிரதான வருவாய் மூலமான சுற்றுலாத்துறைக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இப்பெரும் பாதிப்பிலிருந்து மீண்டெழும் முயற்சியில் பங்குகொள்வது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும். ஆனால் சில இனவாத அமைப்புகளும் சில பௌத்த அமைப்புக்களும் இந்தச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து வருகின்றன. முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையா எனக் கேட்குமளவுக்கு முஸ்லிம்கள் அச்சத்துடனேயே வாழவும், நடமாடவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

**ஞானசாரரின் கருத்தை ஏற்கின்றீர்களா?**

இப்படியாக ஒருபுறம் முஸ்லிம்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத ஒடுக்குமுறை மேலெழுந்துள்ள நிலையில் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய பொதுபல சேனாவின் பொதுச் செயலர் ஞானசாரதேரர் இது ஒரு சிங்கள தேசம் எனவும் தான் இதைக் கூறும் போது தமிழர்கள் கோபிக்க வேண்டாம் எனவும் தெரிவித்திருந்தார். வடக்கு, கிழக்குத் தமிழர் தேசம் எனவும் ஏனைய பிரதேசங்கள் சிங்கள தேசம் எனவும் கூறியிருந்தால் நாம் கோபிக்கமாட்டோம் என்பது உண்மைதான். ஆனால் அவரின் வார்த்தைகளோ இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமான தேசம் எனவும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இங்கு உரிமையில்லை என்பதையும் வலியுறுத்தும் வகையிலேயே அவரின் உரை அமைந்திருந்தது.

இந்த நிலையில் அவரின் கூற்றுக்கு அரசோ எதிர்க்கட்சிக் கூட்டணியோ ஏன் ஜே.வி.பி.யினரோ கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந்த நாட்டில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உரிமையில்லை என்ற கூற்றை அவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார்களா என்று நான் கேட்டு வைக்க விரும்புகிறேன்.

விரும்பியோ விரும்பாமலோ, மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ தமிழர்கள், முஸ்லிம்களின் உரிமைகளை மறுதலிக்கும் நீங்கள் எங்களை இந்த நாட்டு குடிமக்களாக ஏற்க முழுமனதுடன் விருப்பம் கொள்ளாத நீங்கள் ஏன் உங்களுக்கு நெருக்கடி வரும் நேரங்களிலெல்லாம் எங்கள் ஆதரவைக் கோரி நிற்கிறீர்கள்.

**ஏமாற்றம்**

2015இல் இந்த ஆட்சி அமைக்கப்பட்ட பின்பு நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசுக்கு ஆதரவு வழங்கினோம். வரவு - செலவுத் திட்டங்கள், தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஒக்ரோபர் 26இல் ஏற்படுத்தப்படவிருந்த ஆட்சி மாற்றம் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அரசுக்கு உறுதியான ஆதரவை வழங்கி வந்திருக்கிறோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என வாக்களிக்கப்பட்டது. நாடாளுமன்ற அரசமைப்பு தெரிவுக்குழு எழுபது தடவைகளுக்கு மேல் கூடிக் கலைந்த நிலையில் நான்கு வருடங்கள் கடந்துவிட்டபோதும் அது ஆலோசனை என்ற அளவிலேயே உள்ளது. 1972ஆம் ஆண்டின் அரசமைப்பு 1978இன் அரசமைப்பு என்பன ஒரு சில மாதங்களில் தயாரித்து நிறைவேற்றப்பட முடியுமானால் தற்போதைய அரசமைப்போ நான்கு வருடங்கள் கடந்தும் ஏன் உயிர்பெறவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் தாங்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுவதாக உணர்வதில் என்ன தவறு இருக்க முடியும்.

காணாமல்போனோர் விவகாரம் தொடர்பாக ஒரு நகர்வு கூட முன்நோக்கி மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் கைதிகள் எத்தனையோ போராட்டங்கள் நடத்திய பின் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்களிக்கப்பட்டது. ஆனால் கண்துடைப்புக்காக ஓரிருவரை மறுவாழ்வுக்கு அனுப்பிவிட்டு பலருக்கு ஆயுள்தண்டனை, நூறு வருடம், இருநூறு வருடம் என கொடிய தண்டனைகள் வழங்கப்பட்டன. ஒருபகுதி காணிகள் விடுவிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பல முக்கிய இடங்களிலிருந்து படையினர் வெளியேற மறுக்கின்றனர். எமது மக்களோ இடைத்தங்கல் முகாம்களில் அல்லற்படுகின்றனர்.

நாம் தொடர்ந்து அரசுக்கு எமது ஆதரவை உறுதியான முறையில் வழங்கி வந்தபோதிலும் நாம் தொடர்ந்து ஏமாற்றுப்பட்டே வந்துள்ளோம். தொடர்ந்தும் நாம் ஏமாற்றுப்படவேண்டுமா? அரச தரப்பு உறுப்பினர்களே நாம் இப்போதும் உங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்படவேண்டுமா? உங்களில் சிலர் இது சிங்கள பௌத்த தேசம் என்பதை ஏற்றுக்கொண்டவர்கள். அப்படியானால் உங்களுக்கே உரிய தேசத்தின் ஆட்சியைக் காப்பாற்ற ஏன் எங்களின் உதவியைக் கோருகின்றீர்கள்?

**நீங்கள் ஆட்சி அமைக்கத் தயாரா?**

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நீங்கள் முன்வைப்பதற்காகக் கூறும் காரணங்கள் நியாயமானவை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். வாழ்க்கைச் செலவு உயர்வால் எமது மக்கள் மூச்சுத் திணறுவதை நாங்கள் உணர்கிறோம். அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் நாடு துண்டாடப்பட்டு விற்கப்படுவதை நாமும் ஏற்கிறோம். எதிர்காலத்தில் இலங்கை மேற்கு நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையேயான ஆயுத, பொருளாதார போட்டியில் மையமாக மாறுவதை நாமும் விரும்பவில்லை.

இந்த நிலையில் உங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் இந்த அரசு வீழ்த்தப்பட்டால் உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? உங்களால் ஆட்சி அமைக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. அடுத்த தரப்பு மகிந்த தரப்பு? மீண்டும் நாம் ராஜபக்ச சகோதரர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு வழி திறந்து விடவேண்டுமா?

ஆளும் தரப்பிடமும் எதிர்த்தரப்பினரிடமும் நாம் கேட்பது ஒன்றைத்தான் எமது உரிமைப் பிரச்சினைகளை நேர்மையாக அணுகுங்கள். நேர்மையாகத் தீர்க்க முயற்சி செய்யுங்கள் அப்போது எங்கள் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும் - என்றார். (ஔ.5)

## முதல்...

விகாரைக்கான புனித தாது, குருநாகல் நெவகட செல்கிரி விகாரையிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஊர்வலமாக நாவற்குழி நோக்கி எடுத்து வரப்பட்டது. அனுராதபுரம் துபாராம சைத்திய விகாரையை நேற்று இரவு சென்றடைந்தது. இன்று காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்ட மாலை 5 மணிக்கு நாவற்குழி விகாரையை வந்தடையும். விகாரை திறப்பு விழாவில் நூற்றுக் கணக்கான பிக்குகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ரணில் தலைமையிலான ஆட்சிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டது. ரணிலின் ஆட்சி காப்பாற்றப்பட்டு, 48 மணித்தியாலங்களுள், தமிழர் தாயகப் பிரதேசமான நாவற்குழியில் இடம்பெற்ற முதலாவது சிங்களக் குடியேற்றத்தில் அமைக்கப்பட்ட விகாரை திறந்து வைக்கப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தது. 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தில் (அப்போது மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை) திடுதிடுப்பென நூற்றுக் கணக்கான சிங்களக் குடும்பங்கள் வந்து குடியமர்ந்தன. தாம் போருக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வசித்ததாகத் தெரிவித்தனர். இரண்டு மாதங்கள் தொடருந்து நிலையத்தில் தங்கியிருந்த அவர்கள், அதே ஆண்டு டிசெம்பர் மாதம் நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சென்று அத்துமீறி குடியேறினர். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சராக அப்போது விமல் வீரவன்ச இருந்தார்.

அந்தக் காணியில் குடியேறிய மக்களுக்கு, நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு மகிந்த அரசில் பங்காளிகளாக இருந்த ஹெல உறுமயவினர் (அமைச்சர் சம்பிக்கவின் கட்சி) உதவிகளை வழங்கினர். அவர்களின் உதவிகளால் விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இராணுவத்தினர் விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வுக்கு உதவிகள் செய்திருந்தனர்.

விகாரைக் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சாவகச்சேரி பிரதேசபை இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. விகாரையைக் கட்டுவதற்கு சாவகச்சேரி நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாச, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் விகாரை அமைப்பதற்கு உரிய அனுமதிகளை வழங்கினார். காணி அனுமதி கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து விகாரை அமைப்பதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபை விகாரை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியது. விகாரை கட்டி முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (ஔ.5,21,9)

## யாழ்ப்பாணம்...

கள் ஆட்சி செய்திருந்தார். இந்தக் காலப் பகுதிக்குள் தென்னிலங்கையைச் சேர்ந்த 61 இளைஞர்கள் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

தென்னிலங்கை இளைஞர்களை வடக்கில் நியமிப்பதை நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சராக ரணில் பதவியேற்ற பின்னர் கோரிக்கை விடுத்திருந்தனர். மின்சார சபைக்கு தென்னிலங்கை இளைஞர்கள் நியமிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நியமித்துள்ளனர். முகாமைத்துவ உதவியாளர்களாக மூவரும், சாரதியாக ஆறு பேரும் கடமையேற்றுள்ளனர்.

வடக்கில் இளையோர் ஆயிரக்கணக்கானோர் வேலையில்லாத நிலையில் கொழும்பு அரசு தென்னிலங்கையிலிருந்து வடக்குக்கு நியமனம் வழங்குவது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. நியமிக்கப்பட்டுள்ள 9பேரில், ஒருவர் கல்முனையைச் சேர்ந்த தமிழர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-105)




மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணி




மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணி

### கரப்பந்தாட்டத் தொடரில்

# மோகனதாஸ் 'ஏ', 'பி' அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூலை 13
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றது.

கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மின்ஒளியில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து அல்லாரை டெல்ரா விளையாட்டுக்கழக அணி மோதியது. ஐந்து சுற்றுகளைக் கொண்டதாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், முதலாவது சுற்று ஆட்டத்தை மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது சுற்று ஆட்டத்தை அல்லாரை டெல்ரா விளையாட்டுக் கழக அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மூன்றாம்,நான்காம் சுற்று ஆட்டங்களை 25:19, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி வெற்றி பெற்றது.
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கைதடி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)



## யங்ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 13
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 11:1 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (23)

## துடுப்பாட்ட தொடர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கிறாஸ்கொப்பர்ஸ் பிறிமியர் லீக் றொகான்.சங்கர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் துடுப்பாட்ட வீரர் மகாஜனன் சார்ள்ஸ் சுதாகரன் சேவியரும், சிறப்பு விருந்தினாராக முன்னாள் துடுப்பாட்ட வீரர் மகாஜனன் ரி.தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
மாலை இடம் பெறும் இறுதியாட்ட நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக குருணாகல் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தின் சிரேஸ்ட உபதலைவரும், இலங்கை துடுப்பாட்டச் சபையின் மத்தியஸ்தர் குழு உறுப்பினருமான ஏ.எம். சித்திக்கும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் மகாஜனன் எம்.மணிசேகரனும், முன்னாள் துடுப்பாட்ட வீரர் மகாஜனன் எஸ்.அருண்குமாரும்,முன்னாள் துடுப்பாட்ட வீரர் டாக்டர் எஸ்.ரகுராஜும் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

## வளர்மதி, கலைமதி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 13
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மின்ஒளியில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
மூன்று சுற்றுகளைக் கொண்டதாக இந்த ஆட்டம் இடம் பெற்றது.முதலாவது, இரண்டாவது சுற்று ஆட்டங்களை புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 25:16,25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது. (23)

*** *** *** ***

மற்றுமொரு போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மின்ஒளியில் இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதியது. மூன்று சுற்றுகளைக் கொண்டதாக ஆட்டம் இடம் பெற்றது.முதலாவது, இரண்டாவது சுற்று ஆட்டங்களை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 25:16,25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி வெற்றி பெற்றது. (23)

### மென்பந்தாட்டத் தொடர்

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி இறுதிக்கு முன்னேறியது.
கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் மோகனதாஸ் விளையட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில்7இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் அஜந்தன் 37 ஓட்டங்களையும்,அமல் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் சிவகீதன்,கஜன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டும் பெற்றது. சுஜீவன் 24 ஓட்டங்களையும், சிவகீதன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் அமல்,கவி தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர். (23)

*** *** *** ***

யாழ்ப்பாணம்,,ஜூலை 13
மற்றுமொரு ஆட்டத்தில் தென்மராட்சி பிறிமியர் லீக் தெரிவு அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் தென்மராட்சி பிறிமியர் லீக் தெரிவு அணியை எதிர்த்து கைதடி நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி நவசக்தி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.அணி சார்பில் கஜன் 17 ஓட்டங்களையும், கனிஸ்ரன் 16 ஓட்டங்களையும், ஜெனிஸ் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் நளன்,கௌரி,நிலக்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தென்மாரட்சி பிறிமியர் லீக் தெரிவு அணி 9.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கைத் தொட்டனர். அணி சார்பில் மாதவன் 26 ஓட்டங்களையும், ரகுமான் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் கலிஸ்ரன்,தேனு ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.(23)

## தடையில் இருந்து தப்பினார் ரோய்

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய் அதிரடியாக விளையாடினார். அவர் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜேசன் ரோய் 85 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கம்மின்ஸ் வீசிய பந்தை அடிக்க முயன்றார். அந்த பந்தை பிடித்த இலக்குக் காப்பாளர் அலெக்ஸ் கேரி ஆட்டமிழப்பு கேட்டு நடுவரிடம் முறையிட்டார்.

உடனே நடுவர் தர்மசேனா ஆட்டமிழப்பு என்று கையை உயர்த்தி விட்டார். ஆனால் ஜேசன் ரோய் பந்து துடுப்பு மட்டையில் படவில்லை என்று கூறி நடுவரிடம் வாக்குவாதம் செய்தார். அந்த சமயத்தில் இங்கிலாந்திடம் டி.ஆர்.எஸ். ரிவியூ வாய்ப்பு இல்லாததால் மேன்முறையீடு செய்ய முடியவில்லை. அதனால் அதிருப்தியடைந்த ஜேசன் ரோய் நடுவரை திட்டி வெளியேற மறுத்தார். பின்னர் மற்றொரு நடுவர் சமாதானப்படுத்த கோபத்துடன் வெளியேறினார். அதனை மீள ஒளிப்பரப்பிய போது அவர் ஆட்டமிழப்பு இல்லை என்பது தெரிய வந்தது குறிப்பிடத்தக்கது.

நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த அவரது செயலுக்கு அவருக்கு போட்டி ஊதியத்திலிருந்து 30 சதவீதம் தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவரை போட்டிகளில் இருந்து இடைவிலக்குவதற்கான இரண்டு புள்ளிகளையும் வழங்கியது பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை.



## ரபேல் நடால் அரையிறுதிக்கு முன்னேற்றம்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகின்றது. காலிறுதிப் போட்டியொன்றில் ஸ்பெயின் நாட்டு வீரர் ரபேல் நடால் 7:5, 6:2,6:2 என்ற நேர்செட் கணக்கில் அமெரிக்கா வீரர் சாம்குயேரியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

நடால் அரையிறுதியில் தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் சுவிட்சர்லாந்து வீரர் பெடரரை எதிர்கொள்கின்றார்.




# கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றி

## மோர்கன் பெருமிதம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்த வெற்றி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவித்ததாவது:

இந்த வெற்றி முற்றிலும் மகிழ்ச்சி அளிக்கிறது. நம்ப முடியாத அளவுக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

எட்ஜ்பாஸ்டன் மைதானம் எங்களுக்கு சாதகமாக இருக்கிறது. இந்த மைதானத்தில் இந்தியாவை வீழ்த்தினோம். உண்மையை சொல்ல வேண்டுமானால் அந்த நம்பிக்கையுடனும், லீக் ஆட்டங்களில் கிடைத்த உத்வேகத்துடனும் இங்கு வந்து விளையாடினோம்.

முன்னேற்றத்தில் இருந்து முன்னேற்றம் அடைவது பற்றி பேசினோம். முதல் பந்தில் இருந்தே நெருக்கடி கொடுத்தோம்.

கிறிஸ் வோக்ஸ் அருமையாக பந்து வீசினார். அதேபோல் ஆர்சர், மற்ற பந்து வீச்சாளர்களும் திறமையுடன் செயற்பட்டு ஆட்டத்தில் எங்களை முன்னிலையிலேயே வைத்திருந்தனர்.

ஜேசன் ரோய், பேர்ஸ்டோவ் சிறந்த நிலையிலேயே இருந்தால் அது எங்களுக்கு பலமாக அமைந்தது.

இங்கிலாந்து அணி 1992ம் ஆண்டு இறுதிப் போட்டியில் விளையாடியபோது எனக்கு 6 வயது. இதனால் இறுதிப் போட்டி பற்றி அதிகம் ஞாபகம் இல்லை. நிறைய தடவை அந்த போட்டியின் 'ஹைலைட்சை' பார்த்து இருக்கிறேன்.

இறுதிப் போட்டியில் விளையாடுவது மிகப்பெரிய வாய்ப்பாகும். 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் முதல் சுற்றோடு வெளியேறினோம். அதில் இருந்து தற்போது இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருக்கிறோம். இது வியத்தகு முன்னேற்றம். எமது கடின உழைப்பில் அனைத்து வீரர்களுக்கும் பங்கு உண்டு. இதுபோன்ற பல வாய்ப்புகளை உருவாக்க விரும்புகிறோம் - என்றார்.

## தோல்வி காயத்தை ஏற்படுத்தி விட்டது

### பின்ஞ் கவலை

நடப்பு உலகக் கிண்ணத்தில் இரண்டாவது அரையிறுதியில்ஆஸ்திரேலியாஅணிமிகமோசமாக தோல்வியடைந்து அரையிறுதியோடு வெளியேறியிருந்தது.

இது குறித்து அஸி அணித் தலைவர் பின்ஞ் தெரிவித்ததாவது;

நாங்கள் அனைத்து துறையிலும் மோசமாக விளையாடி விட்டோம். அவர்கள் எங்களின் முதல் 3 இலக்குகளை விரைவில் வீழ்த்தி விட்டனர்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் கற்றுக் கொள்ள நிறைய நல்ல விடயங்கள் உள்ளன. எம்மால் வெற்றி பெற முடியும் என்ற எண்ணத்துடன்தான் களமிறங்கினோம். கடந்த 6 மாதங்களாக கூட நிறைய நேர்மறை எண்ணங்கள் இருந்தன. ஆனால் இந்த தோல்வி காயத்தை ஏற்படுத்தி விட்டது.

இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடிய போது இலக்குகளை வீழ்த்தும் வாய்ப்புகளை எதிர்பார்த்தோம். அவர்கள் அதற்கு இடம் கொடுக்காது சிறப்பாக விளையாடினார்கள்.

இங்கிலாந்து அணியினர் எவ்வளவு ஆற்றல் வாய்ந்தவர்கள், ஆதிக்கம் நிறைந்தவர்கள் என்பதை அறிவோம். என்றாவது ஒரு நாளில் நமது திறமையை செயற்படுத்த முடியாமல் போய்விடும் என்று நினைத்தோம் அது நடந்த விட்டது.

சில வீரர்கள் காயத்துடன் இங்கு வந்தார்கள். ஆனால் அதை தோல்விக்கு காரணமாக சொல்லக்கூடாது. கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்றுதான் இங்கு வந்தோம். ஆனால் அது நடக்காமல் போய்விட்டது - என்றார்.



உலகக் கிண்ண இறுதிப் போட்டியின்

## களநடுவராக குமார் தர்மசேன

உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியின் கள நடுவராக குமார் தர்மசேனவும் மற்றும் ரஞ்சன் மடுகல்லே மூன்றாவது மத்தியஸ்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உலக கிண்ண கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

குறித்த போட்டிக்கான நடுவரையும் மத்தியஸ்தரையும் பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. அதன்படி கள நடுவராக குமார் தர்மசேனவும் மற்றும் ரஞ்சன் மடுகல்லே மூன்றாவது மத்தியஸ்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## இங்கிலாந்து – ஆஸ்திரேலியா போட்டியின் போது மைதானத்துக்கு மேல் விமானம் பறந்ததால் பரபரப்பு

உலகக் கிண்ணத் தொடரின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்ற எட்ஜ்பாஸ்டன் மைதானத்துக்கு மேல் 'உலகம் பலுசிஸ்தானுக்காக பேச வேண்டும்' என வாசக பதாகையுடன் விமானம் பறந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் போட்டி நடைபெறும் மைதானத்துக்கு மேல் விமானத்தில் பதாகைகளை கட்டி பறக்கவிட்டு அரசியல் தொடர்பான எதிர்ப்பை சிலர் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் விளையாடிய எட்ஜ்பாஸ்டன் மைதானத்துக்கு மேல் விமானம் ஒன்று பதாகை ஒன்றை கட்டிக்கொண்டு பறந்தது. குறித்த பதாகையில் "உலகம் கட்டாயம் பலுசிஸ்தான் பற்றி பேச வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்த நிலையில் குறித்த விமானம் சுமார் ஐந்து நிமிடங்கள் மைதானத்தை சுற்றி பறந்தது.

உலகக் கிண்ணப் போட்டி நடைபெறும் மைதானத்துக்கு மேல் எதிர்ப்பு தெரிவித்து பதாகையுடன் விமானம் பறப்பது இது முதல் முறை அல்ல. இதற்கு முன் பாகிஸ்தான் - ஆப்கான் அணிகள் மோதிய போட்டியின்போதும் இதுபோன்று வாசகம் எழுதிய பதாகையுடன் மைதானத்துக்கு மேல் விமானம் பறந்தது.

இந்தியா - இலங்கை போட்டியின்போதும் 'காஷ்மீருக்கு நீதி வேண்டும்', 'இனப்படுகொலையை இந்தியா நிறுத்த வேண்டும்', 'காஷ்மீரை விடுவிக்க வேண்டும்' என்ற வாசகங்களுடன் விமானம் பறந்தது. மற்றொரு விமானத்தில் "கும்பல்களால் அடித்துக் கொலை செய்யப்படும் சம்பவங்களை நிறுத்துக" என எழுதப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. இதனால் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதிய முதலாவது அரையிறுதி ஆட்டத்தின்போது மன்செஸ்டர் மைதானத்துக்கு மேல் விமானம் பறக்க தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் இலவியன் கலட்டியில்
10 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு
உண்டு. தோட்டம் அல்லது
வீடு கட்ட உகந்தது.

**076 845 9725**

(ex.234723)(13.17)

**யாழ்நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை**

- சாரதி
- பணவசூலிப்பாளர்கள்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையுடன்
**15.07.2019** திங்கட்கிழமை கீழ் உள்ள முகவரிக்கு
**காலை - 9.30 - பி.ப. 2.00 வரை**
**நேரில் சமுகம் தரவும்.**

**ES Printers**
இல.359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்;
# செரீனா - ஹொலப் இன்று இறுதியில்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு 2ஆவது அரையிறுதியில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் தரநிலை பெறாத செக் குடியரசின் பார்போரா ஸ்ட்ரைகோவாவை எதிர் கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6:1, 6:2 என்ற நேர்செட் கணக்கில் இலகு வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் சிமோனா ஹொலப் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியிருந்தார்.

இன்று இடம்பெறும் இறுதிப் போட்டியில் சிமோனா ஹாலெப்பை எதிர்கொள்கிறார் செரீனா வில்லியம்ஸ். இருவருக்குமான ஆட்டம் விறுவிறுப் பாகக் காணப்படும்.

**BCHS**

நீங்கள் Canada வில்
கல்வி கற்க ஆர்வமுடையவரா,
**Canada student visa**

No.15 2/1, Off Stanley Road,
Sirambiyadi Lane, Jaffna
Call: 021 222 4550/ 076 138 0212



# BACHOLOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வ தேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல் கலைக்கழகம் ஒன்றில் பட்ட மேற் படிப்பு கற்கை நெறி ஒன்றை தொடர்வதற்கும் அமையும்



# BACHOLOR OF INFORMATION TECHNOLOGY
## TOP-UP DEGREE (1 YEAR)

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bacholor of Information Techology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப்படுவார்கள். (அதாவது மூன்று வருடகால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு. exemption வழங்கப்படும்.

(C/10630)(10)

மேற்படி பட்டப்படிப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

உடன் அழையுங்கள்
**0777174443**

www.blccampus.edu.lk

BLC CAMPUS
**4th Lane, Brown Road, Jaffna.**
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

LINCOLN UNIVERSITY COLLEGE

Recognized by:

இரண்டு மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
**077 9086737**
**GUNA BEST PC COMPUTER REPAIR**
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

# மிச்சல் ஸ்மார்க் புதிய சாதனை

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரான மிச்சல்



ஸ்டார்க் பேர்ஸ்டோவின் இலக்கை கைப்பற்றியதன் மூலம் அவர் இந்த உலகக் கிண்ணத்தில் 27 ஆவது இலக்கைக் கைப்பற்றி இந்த உலகக் கிண்ணத்தில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்னர் ஆஸ்திரேலியா வீரர் மெக்ராத் 2007 இல் மேற்கிந்தியத்தீவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் 26 இலக்குகளை வீழ்த்தியிருந்ததே சாதனையாக இருந்தது. அதனை தற்போது 12 வருடத்துக்குப் பின்னர் ஸ்டார்க் முறியடித்துள்ளார்.

## VACANCIES FOR
# SECRETARY & RECEPTIONIST



We are one of the leading Institute in Jaffna. We are looking for a committed and enthusiastic individual with the ability to work independently to join our team.

### Secretary

- Minimum 1 year experience in similar position
- An excellent command of written and spoken English
- Good knowledge of MS Windows/Excel & e-mails
- The Willingness & eagerness to learn and pursue a career in the future
- Retired secretary also will be considered

### Receptionist

- Minimum 1 year experience in similar position
- An excellent command of spoken English
- Ability to work under pressure

Those who are interested, Send your CV along with details of two non-related refrees within 7 days to:

jaffnavacancy@gmail.com

## வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை

ஆரம்பம்:05.09.2019 | நாட்கள்:16 | யாத்திரிகர்:15

**செல்லுமிமிடங்கள் சுருக்கமாக: டெல்லி:** நாராயணர்கோவில் மற்றைய இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா**, தாஜ்மகால், **மதுரா**, கிருஷ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர்தரிசித்தல், **அலகாபாத்**, கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம் வேறுஇடங்களும் காணலாம். **கயா** காலமானவர்களுக்கும் சிரார்த்தம் செய்யுமிடம், அகால மரணமானவர்களுக்கும் சேர்த்து செய்யலாம். புத்தகயா, பலநாடுகள் கட்டிய புத்தாலயங்கள், **சீத்தாமடி**, சீதைதாயாருடன் பூமிக்குள் புதையுண்ட இடம், **காசி** விஸ்வநாதர் உட்பட்ட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்கா பூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்**, சீரடிபாபா, தரிசனம், சனிசிங்கனாப்பூர், சனிபகவான்கோவில், திரியம்பகேஸ்வரர்ஜோதிலிங்க தரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசி யாத்திரை நிறைவு பின்னர் நவபாஷாணம் உத்திரகோசமங்கை, சிவன் ஆலயம், திருப்புலானி தரிசித்து மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், தரிசனம் முடித்து **திருப்பதி** காளகஸ்திரி, அலமேலுமங்கா, திருத்தணி, தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1 நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 21.09.2019 நாடு திரும்பல்

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:** 5 விமானப்பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமானநிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

குறைந்த கட்டணம்
நிறைவான தரிசனம்

**"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"**
**"பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"**

**கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன் மகன்:ராஜன்**
Office: City Center Shoping Complex 3rd Floor, No.59, 3/6, Sea Street, Colombo - 11
Email: sriranganathan2601@gmail.com Facebook: sridevisriranganathan thuraiappa
Tel: 0777680102 0777362154

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.